مؤسسة عبد العزيز بن باز الخيرية

سلسلة مؤلفات ورسائل سماحة الشيخ / عبد العزيز بن باز رحمه الله رقم (١٦)

# முக்கியப்

# பாடங்களின் விரிவுரை

## الدروس المهمة لعامة الأمة

باللغة التاميلية

لسماحة الشيخ

عبد العزيز بن عبد الله بن باز

رحمه الله



طبع على نفقة الشيخ

علي بن عبد الرحمن الرغش

وفقه الله وغفر له ولوالديه وذريته والمسلمين

بسم الله الرحمن الرحيم

تشرف بإعداد وترجمة هذا الكتاب


## شعبة توعية الجاليات بالزلفي

وزارة الشؤون الإسلامية والأوقاف والدعوة والإرشاد

الزلفي ١١٩٣٢ - المنطقة الصناعية - ص.ب: ١٨٢

ت: ٠٦٤٢٢٥٦٥٧ - فاكس: ٤٢٢٤٢٣٤

حساب الطباعة: ١/٦٩٦٠ - الحساب العام: ٣/٦٩٥٩

شركة الراجحي المصرفية - فرع الزلفي



**حقوق الطبع محفوظة**

لا يسمح بطبع أي من مطبوعاتنا إلا للتوزيع المجاني فقط.

بشرط عدم التصرف في أي شيء عدا شكل الغلاف الخارجي



**இந்நூல் தயாரிப்பு:**

**ஜுல்ஃபி வெளிநாட்டவர் அழைப்பு மையம். ஜுல்ஃபி-*11932*. சவுதி.**

*F.G.O. at Zulfi - Zulfi 11932. P.O. Box: 182.*

*Saudi Arabia. Phone: 064225657 Fax: 064224234*



**பதிப்புரிமை தயாரித்தவர்களுக்கு மட்டுமே இலவசமாக பிரசுரிக்க விரும்புபவர்கள் பிரசுரித்துக் கொள்ளலாம்.**

# شرح الدروس المهمة
تأليف فضيلة الشيخ / عبدالعزيز بن داود الفايز
ترجمه للغة التاميلية
شعبة توعية الجاليات في الزلفي

الطبعة الثانية: ١/١٤٢٢ هـ.

ح المكتب التعاوني للدعوة والإرشاد وتوعية الجاليات بالبديعة، ١٤٢٨هـ

فهرسة مكتبة الملك فهد الوطنية أثناء النشر

شعبة توعية الجاليات بالزلفي

شرح الدروس المهمة باللغة التاميلية / شعبة توعية الجاليات بالزلفي - الرياض ، ١٤٢٨هـ

٧٢ ص ؛ ١٢ × ١٧ سم

ردمك : ٤-٨٢٥-٥٨-٩٩٦٠-٩٧٨

١- الإسلام - مبادئ عامة ٢- الثقافة الإسلامية

أ- العنوان

ديوي ٢١١ ١٤٢٨/٧٥٩٣

رقم الايداع: ١٤٢٨/٧٥٩٣

ردمك: ٤-٨٢٥-٥٨-٩٩٦٠-٩٧٨

صف وإخراج: شعبة توعية الجاليات في الزلفي

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | பாடம் - 1 | 5 |
| 2 | கலிமாவும் அதன் விளக்கமும் | 7 |
| 3 | ஈமானின் கடமைகள் | 14 |
| 4 | தவ்ஹீதின் வகைகள் | 26 |
| 5 | இஸ்லாத்தின் கடமைகள் | 30 |
| 6 | தொழுகையின் நிபந்தனைகள் | 33 |
| 7 | தொழுகையின் ருகன்கள் | 35 |
| 8 | தொழுகையின் வாஜிபுகள் | 39 |
| 9 | அத்தஹிய்யாத் | 41 |
| 10 | தொழுகையின் சுன்னத்துகள் | 46 |
| 11 | தொழுகையை வீணாக்கக்கூடியவை | 48 |
| 12 | உளூவின் நிபந்தனைகள் | 50 |
| 13 | உளூவின் ஃபர்ழுகள் | 52 |
| 14 | உளூவை நீக்கும் காரியங்கள் | 54 |
| 15 | சில நற்குணங்களும் ஒழுக்கங்களும் | 58 |
| 16 | ஷிர்க் மற்றும் பாவங்களை விட்டும் தவிர்ந்து கொள்ளுதல் | 62 |
| 17 | ஜனாஸாவின் சில சட்டங்கள் | 65 |

## பாடம் – 1

**ஸூரத்துல் பாத்திஹாவையும் ஸூரத்துஸ் ஸல்ஸலா விலிருந்து ஸூரத்துன் நாஸ் வரையுள்ள சிறிய ஸூராக் களையும் பார்த்து நன்கு ஓதவும், அவற்றை மனனம் செய்து கொள்ளவும், அவற்றில் அவசியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியதை விளக்கமாகத் தெரிந்து கொள் ளவும் வேண்டும்.**

---

பேரறிஞர் ஷைக் அப்துல் அஸீஸ் பின் அப்துல்லாஹ் பின் பாஸ் அவர்கள் (அல்லாஹ் அவர்களை பாதுகாத்து, அவர் கள் மூலம் முஸ்லிம்களுக்கு பயனளிப்பானாக. அவர்களுக்கு மகத்தான கூலியையும், நன்மையையும் வழங்குவானாக!) முதல் பாடத்தில் முஸ்லிம்கள் அனைவரும் அவரவர் சக்திக் கேற்ப ஸூரத்துல் பாத்திஹாவையும் சிறிய ஸூராக்களையும் கற்றுக் கொள்வது அவசியமாகும் எனக் கூறியுள்ளார்கள். ஏனெனில் 'யார் ஸூரத்துல் ஃபாத்திஹாவை ஓதவில்லையோ அவருக்குத் தொழுகை இல்லை என்பது நபிமொழி.

இந்த ஸூராக்களை மக்களுக்குப் போதிக்கக் கூடியவர் கீழ்க் காணும் முறைகளைக் கடைபிடிக்க வேண் டும்.

அவர்கள் படிக்கத் தெரியாதவர்களாக இருந்தால் அவர் களுக்குப் படித்துக் காட்ட வேண்டும். அவர்கள் படிக்கத் தெரிந்தவர்களாக இருந்தால் அந்த நிலையிலிருந்து இரண் டாம் நிலைக்குக் கொண்டு வருவது அவ்வாசிரியருக்குக் கடமையாகும். அது அவர்களைச் சரியாக ஓதவைப்பதாகும். பின்னர் மூன்றாம் நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். அது இந்த அத்தியாயங்களை அவர்களுக்கு மனனம் செய்ய வைப்பதாகும்.

மனனம் செய்விப்பதற்குப் பல வழிகள் உள்ளன. அவை, ஆசிரியர் வசனங்களை நிறுத்தி நிதானமாக, ஓதிக் காண்பித்து மக்கள் அதை மனனம் செய்து கொள்ளும் வரை தன்னுடன் சேர்ந்து திரும்பத் திரும்ப ஓதும்படிக் கூற வேண்டும். இதன் பின் ஆசிரியர் அவர்கள் விளங்கிக் கொள்ளுமளவிற்கு அந்த வசனங்களின் பொருளை தெளிவாக விளக்க வேண்டும். அதன் பின்னர், தான் படித்துக் காட்டிய வசனங்களின் சில சட்டங்களை எடுத்துரைக்க வேண்டும். உதாரணமாக ஸூரதுல் ஃபாத்திஹாவை எடுத்துக் கொண்டால் "ஸூரதுல் ஃபாத்திஹாவை ஓதுவது தொழுகையின் கடமைகளில் ஒன்றாகும். ஏனெனில் 'ஸூரதுல் ஃபாத்திஹாவை ஓதாதவருக்கு தொழுகை இல்லை' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்" என்று கூறலாம். (புகாரீ, முஸ்லிம்)

இவ்வாறே, அல்லாஹ் தனக்கு என்னென்ன திருப்பெயர்கள், பண்புகள் இருப்பதாகக் கூறியுள்ளானோ அல்லது நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுக்கு என்னென்ன திருப்பெயர்கள், பண்புகள் இருப்பதாகக் கூறியுள்ளார்களோ அவற்றை எவ்வித மாற்றம் செய்யாமல், ஒப்பு, உவமையாக்காமல், உருவகப்படுத்தாமல் அப்படியே நம்பிக்கை கொள்ள வேண்டுமென்றும் மேலும் அல்லாஹ்வும் அவன் தூதரும் அல்லாஹ்வுக்கு எதெல்லாம் இல்லையென கூறினார்களோ அவற்றை அவ்வாறே நம்ப வேண்டுமென்றும் நம் முன்னோர்கள், இமாம்கள் ஆகியோர் ஏகமனதாக முடிவெடுத்துள்ள அடிப்படை என்பதையும் ஆசிரியர் அவர்களுக்குச் சொல்ல வேண்டும்.

அதன் பிறகு வணக்க என்றால் அல்லாஹ்வுக்கு விருப்பமான வெளிப்படையான மற்றும் அந்தரங்கமான சொல், செயல்கள் அனைத்திற்கும் சொல்லப்படும் என்பதையும் அவர்களுக்குச் சொல்ல வேண்டும். வணக்கத்துடன் ஷிர்க்

எனும் இணைவைப்பு கலந்துவிடுமானால் வணக்கம் பாழாகி விடும் என ஆசிரியர் விளக்க வேண்டும். இதுவும் ஸூரத்துல் ஃபாத்திஹாவிலுள்ள சட்டங்களிலுள்ளதுதான்.

இதுபோல ஒரு முஸ்லிம் மறுமை நாளை எண்ணிப் பார்ப்பதும் அவசியமாகும். அந்த மாபெரும் நாளை மறக்காமலிருப்பது வணக்க, வழிபாடுகளைச் செய்வதற்கும், விலக்கப்பட்டவைகளைத் தவிர்ந்து கொள்வதற்கும் மனிதனுக்கு உதவியாக இருக்கும் என்பதையும் ஆசிரியர் அவர்களுக்கு விளக்கிக் கொடுக்க வேண்டும். இவ்வாறே ஏனைய ஸூராக்களிலும் நடந்து கொள்ள வேண்டும்.

## பாடம் – 2

லாஇலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள்) எனச் சான்று பகர வேண்டும். அத்துடன் அதன் விளக்கத்தையும் லாஇலாஹ இல்லல்லாஹ்வின் நிபந்தனைகளையும் அறிந்துகொள்ள வேண்டும். லாஇலாஹ- வணக்கத்திற்குரிய இறைவன் யாரும் இல்லை என்தில் அல்லாஹ்வை விடுத்து வணங்கப்படக் கூடிய அனைத்தையும் நிராகரித்தல் என்னும் கருத்து உள்ளது. இல்லல்லாஹ்- அல்லாஹ்வைத் தவிர என்பதில் வணக்கத்திற்குரிய தகுதி அல்லாஹ்வுக்கு மட்டுமே உண்டு. வணக்க வழிபாடுகளை அவனுக்கே உரித்தாக்க வேண்டும். அவனுக்கு இணை, துணை எதுவும் இல்லை என்ற கருத்து இருக்கின்றது.

இந்தப் பாடத்தில் மூலாசிரியர் லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் எனச் சான்று பகர்வது பற்றிக் கூறியுள்ளார். இதன் விளக்கத்தை பின் வருமாறு வகைப் படுத்துவோம்.

1. இக்கலிமாவின் அந்தஸ்து

இக்கலிமா இஸ்லாமிய அடிப்படைக் கடமைகளில் முதல் கடமையாகும். நபி(ஸல்) கூறினார்கள்: இஸ்லாம் ஐந்து காரி யங்களின் மீது அமைக்கப்பட்டுள்ளது. அவை வணக்கத்திற் குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில் லை, நிச்சயமாக முஹம்மத்(ஸல்)அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் எனச் சாட்சி பகர்வது, தொழுகையை நிலை நாட்டுவது, ஸகாத் கொடுப்பது, ரமழானில் நோன்பு நோற் பது, சக்தி பெற்றவர்கள் மக்காவுக்குச் சென்று ஹஜ் செய் வதாகும். அறிவிப்பவர்: இப்னு உமர் (ரலி) *(புகாரி, முஸ்லிம்)*

எனவே ஏகத்துவக் கலிமாதான் மார்க்கத்திற்கு அடிப் படையும், அதன் உறுதிவாய்ந்த கோட்டையுமாகும். அதுவே அடியானின் முதல் கடமையுமாகும். எல்லாக் காரியங்களும் ஏற்றுக்கொள்ளப்படுவது இக்கலிமாவை மொழிவதன் மீதும் அதற்கேற்ப செயல்படுவதின் மீதுமே அமைந்துள்ளன.

2. அதன் பொருள்

உண்மையில் வணங்கப்படுவதற்குத் தகுதியான இறை வன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதாகும். இதன் பொருள், படைப்பவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அல்லது நிலையானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அல்லது உணவளிப்பவன் அல்லாஹ் வைத் தவிர வேறு யாருமில்லை என்று கூறக் கூடாது. ஏனெ னில் குறைஷிக் காஃபிர்கள், அல்லாஹ்தான் படைப்பவன்

(மற்றும் உணவளிப்பவன்)என்பதை மறுக்கவில்லை. அவ்வா றிருந்தும் அது அவர்களுக்கு எந்தப் பலனையும் அளிக்க வில்லை. மேலும் அதன் பொருளை அவர்கள் விளங்கியே இருந்தனர். அதனால்தான் நபி(ஸல்)அவர்கள், 'லாலாஹ இல்லல்லாஹ் எனக் கூறுங்கள்' என அவர்களிடம் கூறிய போது அவர்கள் அதனை ஏற்க மறுத்தனர்.

நமக்கு ஆச்சரியம் என்னவெனில் இக்காலத்தில் பலரும் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறுகிறார்கள் அதன் பொ ருளை அறிவதில்லை. மேலும் அல்லாஹ்வுடன் அவ்லியாக்க ளையும் கப்ரிலுள்ளவர்களையும் அழைத்துப் பிரார்த்திக்கி றார்கள். மேலும் தாங்கள் ஏகத்துவவாதிகள் எனவும் பீற்றிக் கொள்கிறார்கள்.

3. அதன் அம்சங்கள்

இக்கலிமாவுக்கு இரண்டு அம்சங்கள் உள்ளன.

1. எதிர்மறை. அதாவது லாஇலாஹ என்ற கூற்றில் அல் லாஹ்வை விடுத்து ஏனைய அனைத்திற்கும் வணக்கத் திற்குரிய தகுதி இல்லையென மறுக்கப்டுகின்றது.

2. உடன்பாடு. அதாவது இல்லல்லாஹ் எனும் கூற்றில் வணக்கத்திற்குரிய தகுதி அல்லாஹ் ஒருவனுக்கு மட்டு மே உண்டு என உறுதிப்படுத்தப்படுகின்றது.

4. இக்கலிமாவின் சிறப்பு

இதற்கு மகத்தான சிறப்புகள் உள்ளன. அல்லாஹ்விடம் இதற்கு உயர்ந்த அந்தஸ்து உள்ளது. வாய்மையோடு யார் இதை மொழிந்தாரோ அவரை அல்லாஹ் சுவனத்தில் சேர்த் திடுவான். இதை எவன் பொய்யாகக் கூறுகிறானோ அவனு டைய உயிருக்கும் உடமைக்கும் இவ்வுலகில் பாதுகாப்பு உண்டு. மறுமையில் அவனுடைய கணக்கு அல்லாஹ்விடம்

இருக்கும். அவனுக்கு நயவஞ்சகர்களின் சட்டமே. இந்தக் கலிமா சுருக்கமான வார்த்தையைக் கொண்ட, எழுத்துக் கள் குறைந்த, நாவிற்கு இலேசான, (மறுமையின்)தராசிற்கு கனமானதாகும்.

இந்த மகத்துவமிக்கக் கலிமாவிற்கு அநேக சிறப்புகள் உள்ளன. ஹாஃபிழ் இப்னு ரஜப் அவர்கள் தமது 'கலிமத்துல் இக்லாஸ்' என்ற நூலில் சிலவற்றை ஆதாரத்துடன் குறிப்பிட் டுள்ளார். அவற்றுள் சில வருமாறு:

நிச்சயமாக இது சுவனத்தின் விலையாகும். யாருடைய இறுதி வார்த்தை லாஇலாஹ இல்லல்லாஹ் என ஆகிவிடுகி றதோ அவர் சுவனம் செல்வார். இன்னும் இது நரகிலிருந்து பாதுகாக்கும். இதன் மூலம் கட்டாயம் பாவமன்னிப்பு கிடைக் கும். இதுவே நன்மைகளில் மிகச் சிறந்ததும் பாவங்களை அழித்துவிடக் கூடியதும் தடையைத் தகர்த்து அல்லாஹ் வின் பக்கம் சென்றடையக் கூடியதுமாகும். இக்கலிமாவைக் கூறியவனை அல்லாஹ் உண்மைப்படுத்துவான். நபிமார்கள் கூறியதில் இதுவே மிகச் சிறந்தது. மிகச் சிறந்த திக்ர். அமல் களில் மிகச் சிறந்தது.

பெரும்பாலும் கூலியை இரட்டிப்பாக்கப்படுவது இக்கலிமா தான். இது அடிமைகளை விடுதலை செய்வதற்கு நிகரானது. ஷைத்தான், கப்ரின் சோதனை, மறுமையின் பயங்கரங்கள் ஆகியவற்றை விட்டும் பாதுகாக்கும். முஃமின்கள் தம் கப்ருக ளிலிருந்து எழுந்து வருகிறபோது அவர்களின் அடையாள மாக இருக்குகும். இக்கலிமா, அதைக் கூறியவனுக்கு சுவர்க் கத்தின் எட்டு வாயில்களைத் திறந்துவிடும். அவன் அவற்றில் விரும்பியதில் நுழைவான். இன்னும் இதை மொழிந்தவர்கள் இதன் கடமைகளில் தவறிழைத்ததனால் நரகம் சென்றாலும் அதிலிருந்து வெளியேற்றப்படுவது நிச்சயம்.

5. முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதரெனச் சாட்சி சொல்வது

**இது அவர்களையும் அவர்கள் அறிவித்தவற்றையும் நம்புதல், அவர்களின் ஏவல்களை எடுத்து நடந்து, அவர்கள் விலக்கியதைத் தவிர்ந்து கொள்ளல், அவர்களுடைய ஏவல், விலக்கல்களைக் கண்ணியப்படுத்துதல், அவர்களின் சொல்லை விட வேறு யாருடைய சொல்லுக்கும் முன்னுரிமை தராதிருத்தல் ஆகிய அனைத்தையும் உள்ளடக்குகின்றது.**

**6. வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு இணையேதும் இல்லை. முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும் அவன் தூதருமாவார்கள் எனவும், ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் அடியாரும், அவனது தூதரும், மர்யமுக்கு அவன் போட்ட வார்த்தையும், அவனுடைய உயிரும் ஆவார். மேலும் சுவர்க்கம், நரகம் உண்மையே எனவும் யார் சாட்சி சொல்கிறாரோ அவர் சுவனம் செல்வார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இதுபோலவே உபாதா பின் ஸாமித் (ரழி) அறிவிக்கும் நபிமொழியிலும் உள்ளது.**

---

**லாஇலாஹ இல்லல்லாஹ்வின் நிபந்தனைகள் எட்டு அவை: அறிதல், உறுதி கொள்ளல், மனத்தூய்மை, வாய்மை, நேசித்தல், கீழ்ப்படிதல் ஏற்றுக் கொள்ளல், அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுகின்ற அனைத்தையும் நிராகரித்தல் ஆகியனவாகும்.**

---

**ஏகத்துவக் கலிமாவிற்கு அறிஞர்கள் ஏழு நிபந்தனைகளைக் கூறியுள்ளார்கள். மூலாசிரியரைப் போல சிலர் எட்டு என்றும் கூறியுள்ளனர்.**

1. அறிவு: அடியான் அல்லாஹ் மட்டுமே வணக்கத்திற்குரியவன். மற்றவர்களை வணங்வது வீணானது என அறிந்து, அதற்கேற்ப செயல்பட்டால் அவன் அதன் பொருளை நன்கு அறிந்தவனாக ஆவான். அல்லாஹ் கூறினான்: வணக்கததிற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்பதை நீர் அறிந்து கொள்வீராக! (47:19) சத்தியத்தை அறிந்தவர்களாக சாட்சி கூறியவர்களைத் தவிர. (43:86)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை என அறிந்தவராக யாரேனும் மரணித்து விட்டால் நிச்சயம் அவர் சுவனம் செல்வார். *(புகாரி, முஸ்லிம்)*

2. உறுதி: இவ்வார்த்தையைக் கூறியவன் அதை தனது உள்ளத்தில் உறுதி கொள்வதும், வணக்கத்திற்கு மிகவும் தகுதியானவன் அல்லாஹ்! அவனை விடுத்து மற்றவர்களை வணங்குவது வீணானது. மேலும் அவன் கூறியது சரியானது என்று நம்புவதும் அவசியமாகும்.

அல்லாஹ் கூறினான்: (நபியே!) அவர்கள் உமக்குகருளப் பெற்ற (வேதத்) தின் மீதும் உமக்கு முன்னர் அருளப்பட்டவை மீதும் நம்பிக்கை கொள்வார்கள். இன்னும் அவர்கள் இறுதி நாளை உறுதியாக நம்புவார்கள். (2:4)

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லையென தனதுள்ளத்தில் உறுதி கொண்டவராக சாட்சி கூறுபவரை இத்தோட்டத்திற்குப் பின்னால் நீர் சந்தித்தால் அவருக்குச் சுவனம் குறித்து நற்செய்தி கூறுவீராக! என நபி (ஸல்) கூறினர். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) புகாரி, முஸ்லிம்

3. ஏற்றுக் கொள்ளுதல்: இக்கலிமாவின் தேட்டங்களை உள்ளத்தாலும், நாவாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(முஃமின்களே!)நாங்கள் அல்லாஹ்வையும் எங்களுக்கு இறக்கப்பட்ட (வேதத்)தையும் நம்புகிறோம் எனக் கூறுங்கள் (2:136)

4. கீழ்ப்படிதல்: அதாவது இந்த மகத்துவ மிக்க கலிமா எதை அறிவிக்கின்றதோ அதற்கு கிழ்ப்படிதல் என்பதாகும். அல்லாஹ் கூறுகிறான்: மேலும் எவர் நன்மை செய்யக் கூடிய நிலையில் அல்லாஹ்வுக்கு முற்றிலும் வழிப்பட்டு, இப்றாஹீமு டைய தூயமார்க்கத்தையும் பின் பற்றுகிறாரோ அவரை விட அழகிய மார்க்கத்தை உடையவர் யார்?(4:125) எவன் தன் முகத்தை முற்றிலும் அல்லாஹ்வின் பக்கம் திருப்பி, நன்மை செய்து கொண்டிருக்கிறானோ அவன் நிச்சயமாக உறுதி யான பிடிமானத்தைப் பலமாக பற்றிப்பிடித்துக் கொண்டான். (31:22)

5. வாய்மை: அதாவது ஒருவன் தன் ஈமானில் அல்லாஹ் வுடன் வாய்மையோடு நடந்து கொள்வதாகும். அதுபோல அவனது அடிப்படைக் கொள்கை, சொல், செயல், அழைப் புப் பணி முதலியவற்றிலும் வாய்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: ஈமான் கொண்டவர்களே! அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். மேலும் வாய்மையா ளர்களுடன் இருங்கள். (9:119)

6. மனத் தூய்மை: அவனது சொல், செயல்களனைத்தும் உளத்தூய்மையோடு எவ்விதக் கலப்படமுமின்றி அல்லாஹ் வின் திருமுகத்திற்காகவும் அவனது திருப்பொருத்தத்தை நாடியும் அமைய வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்:

வணக்கத்தை அல்லாஹ்வுக்கே தூய்மையாக்கியவர்க ளாக அவனை மட்டுமே அவர்தள் வணங்க வேண்டும் என்ப தைத் தவிர (வேறெதுவும்) அவர்களுக்குக் கட்டளையிடப்பட வில்லை. (98:5)

நபி(ஸல்)கூறினார்கள்: மக்களில் என் பரிந்துரை பாக்கியத்திற்குத் தகுதியானவர்கள் உளத்தூய்மையுடன் யார் லா இலாஹ இல்லல்லாஹ் எனக் கூறினார்களோ அவர்கள்தான். *அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), (புகாரி, அஹ்மத்)*

7. நேசித்தல்: அதாவது இக்கலிமாவையும் அதன் தேட்டத்தையும் நேசிப்பதாகும். எனவே அவன் அல்லாஹ்வையும் அவன் தூதரையும் நேசிக்க வேண்டும். மற்ற எல்லாவற்றை நேசிப்பதை விடவும் அவ்விருவர்களின் நேசத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ் அல்லாதவர்களை அவனுக்கு இணையாக வைத்துக் கொண்டு அவர்களை அல்லாஹ்வை நேசிப்பதுபோல நேசிப்போரும் மனிதர்களில் இருக்கிறார்கள். ஆனால் ஈமான் கொண்டோர் அல்லாஹ்வை மிக அதிகமாக நேசிக்கிறார்கள். (2:165)

8. அல்லாஹ்வைத் தவிர வணங்கப்படுகின்ற அனைத்தையும் நிராகரித்தல்: இது நபி(ஸல்)கூறியது போலாகும். 'எவர் லாஇலாஹ இல்லல்லாஹ் எனக் கூறி அல்லாஹ்வை விடுத்து வணங்கப்படுகின்ற அனைத்தையும் நிராகரிக்கின்றாரோ அவரது உயிர், உடமையை அல்லாஹ் புனிதமாக்கி விடுகிறான். அவனது கணக்கு அல்லாஹ்விடமுள்ளது' *(முஸ்லிம்)*

## பாடம் – 3

### ஈமானின் கடமைகள்

ஈமானின் கடமைகள் ஆறு. அவை: அல்லாஹ்வை அவன் அமரர்களை, அவன் வேதங்களை, அவன் தூதர்கள், இறுதி நாள், நன்மை, தீமையாவும் அவன் விதிப்படியே நடக்கின்றன ஆகியவற்றை நம்புவதாகும்.

**இதற்கு ஆதாரம் ஈமான் பற்றி நபி(ஸல்) அவர்களிடம் ஜிப்ரீல்(அலை)அவர்கள் கேட்ட பிரபல்யமான ஹதீஸாகும். நபி(ஸல்)கூறினார்கள்: ஈமான் என்பது நீ அல்லாஹ்வையும் அவனது வானவர்களையும் அவனுடைய வேதங்களையும் அவனது தூதர்களையும் இறுதி நாளையும் நன்மை, தீமை யாவும் அவனது விதியைக் கொண்டே நடக்கின்றன என்பதையும் நம்ப வேண்டும். *(முஸ்லிம், அஹ்மத்)***

1. அல்லாஹ்வை நம்புதல்:

**இது நான்கு விஷயங்களை உள்ளடக்கியுள்ளது.**

**1. அல்லாஹ் இருக்கிறான் என நம்புவது: இயற்கை, பகுத்தறிவு, இறைமார்க்கம், புலனுணர்வு ஆகிய அனைத்தும் அல்லாஹ் இருக்கிறான் என்பதை அறிவிக்கின்றன.**

**அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு இயற்கையின் ஆதாரமாவது: அனைத்துப் படைப்பினங்களும் சிந்திக்கவும் கற்றுக் கொடுக்கவும் தேவையில்லாமலேயே படைத்தவனை நம்பக்கூடியவையாகவே படைக்கப்பட்டுள்ளன. 'பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் இறைவனை நம்பும் இயல்புடனேயே பிறக்கின்றது. ஆனால் அதனின் பெற்றோர்தான் அதனை யூதனாகவோ கிறிஸ்தவனாகவோ நெருப்பு வணங்கியாகவோ ஆக்கிவிடுகின்றனர்' என்பது நபிமொழி. *(புகாரி, முஸ்லிம்)***

**அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு பகுத்தறிவின் ஆதாரமாவது: படைக்கப்பட்ட முந்தைய பிந்தைய படைப்பினங்கள் அனைத்திற்கும் அவற்றைப் படைத்த படைப்பாளன் ஒருவன் இருப்பது அவசியம். ஏனெனில் இப்படைப்பினங்கள் தம்மைத் தாமே உண்டாக்கிக் கொண்டன அல்லது அவை திடீரென உருவாக்கப்பட்டன என்பது சாத்தியமில்லை.**

**அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு மார்க்க ஆதாரம்: இறைவன் இறக்கிய வேதங்களனைத்தும் இவ்வுண்மையை**

மொழிகின்றன. இவற்றில் மகத்தான் மற்றும் சிறந்த வேதம் திருக்குர்ஆன் ஆகும். அதுபோல இறைத்தூதர்கள் அனை வரும் இன்னும் இறைத்தூதர்களின் தலைவரும் அவர்களில் மிகச் சிறந்தவரும் இறுதியானவருமான முஹம்மது (ஸல்) அவர்களும் இந்த உண்மையின் பக்கமே மக்களுக்கு வழி காட்டிச் சென்றனர். தெளிவாக மக்களுக்கு இதை விளக்கி யும் உள்ளனர்.

அல்லாஹ் இருக்கிறான் என்பதற்கு புலனுணர்வின் ஆதா ரங்கள் இரு கோணங்களிலாகும்:

ஒன்று: பிரார்த்தனை செய்பவர்களின் பிரார்த்தனை ஏற் கப்படுவதையும் நாம் கேள்விப்படுவதும் கண்கூடாகப் பார்ப் பதும் அவனிருக்கிறான் என்று உறுதியாக அறிவிக்கக்கூடிய ஆதாரங்களாகும்.

இரண்டு: நபிமார்களுக்கு வழங்கப்பட்ட சான்றுகள் - அவை முஃஜிஸாத் (அற்புதங்கள்) என்று கூறப்படுகின்றன. மக்கள் அவற்றை நேரடியாகக் காண்கிறர்கள் அல்லது கேள் விப்படுகிறார்கள்- இத்தகைய சான்றுகள் உலகத்தைப் படைத்து அதை நிர்வகிக்கூடிய ஒருவன் இருக்கிறான் அவனே அல்லாஹ் என்பதற்கு உறுதியான ஆதாரமாகும்.

2. அல்லாஹ்வின் படைத்துப் பரிபாலிப்பாலிக்கும் ஆற்ற லை நம்புவது: அதாவது படைத்துப் பரிபாலிப்பவன் அவன் ஒருவனே. அவனுக்கு இணை, துணை யாருமில்லை என்று நம்புவது. ரப்பு என்றால் படைப்பாற்றல், ஆட்சியதிகாரம் கட் டளை பிறப்பிக்கும் அதிகாரம் ஆகியன உடையவன். எனவே அல்லாஹ்வைத் தவிர வேறு படைப்பாளன் யாருமில்லை. அவனையன்றி வேறு ஆட்சியதிபதி எவருமில்லை. கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் அவனுக்கேயன்றி வேறு யாருக்கு மில்லை.

அல்லாஹ் கூறுகிறான்: அறிந்து கொள்ளுங்கள்! படைக்கும் ஆற்றலும், கட்டளை பிறப்பிக்கும் அதிகாரமும் அவனுக்குரியவையே. (7:50)

அவனே உங்கள் இறைவனாகிய அல்லாஹ். ஆட்சியதிகாரமெல்லாம் அவனுக்கே உரியது. அவனையன்றி நீங்கள் எவர்களை அழைக்கின்றீர்களோ அவர்களுக்கு அணுவளவு அதிகாரமும் இல்லை. (35:13)

3. அல்லாஹ் வணக்கத்திற்குரியவன் என்று நம்புவது: அதாவது அவன் மட்டுமே உண்மையான வணக்கத்திற்குரிய இறைவன். அவனுக்கு இணையேதுமில்லை என நம்புவது. 'இலாஹ்' என்பதன் பொருள் உள்ளன்புடனும் கண்ணியத்துடனும் வணங்கப்படுபவன் என்பதாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் இறைவன் ஒரே இறைவன்தான். அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அவனைத் தவிர வேறு இறைவன் இல்லை. (2:163)

நிச்சயமாக நாம் நூஹை அவருடைய சமூகத்தாரிடம் அனுப்பினோம். அவர் கூறினார்: எனது சமுதாயத்தினரே! அல்லாஹ்வையே வணங்குங்கள். அவனையன்றி உங்களுக்கு வேறு இறைவன் இல்லை. (7:59)

4. அல்லாஹ்வின் பெயர்களையும் பண்புகளையும் நம்புவது: அதாவது அல்லாஹ் தனது வேதத்தில் தனக்கு என்னென்ன பெயர்களை, குணங்களைக் கொடுத்துள்ளானோ அல்லது நபி(ஸல்) அவர்கள் தம் ஹதீஸ்களில் விளக்கியுள்ளார்களோ அவற்றை அல்லாஹ்வுக்கு- மாற்றாமல், மறுக்காமல், ஒப்பாக்காமல், விவரிக்காமல் அவனுக்கேற்ற முறையில்- அப்படியே கொடுப்பது. 'அவனைப்போல் எதுவுமில்லை. அவன் (யாவற்றையும்) செவியேற்பவன், பார்ப்பவன்.' (42:11)

அல்லாஹ்வை நம்புவதால் ஏற்படும் பயன்கள்:

அ. அல்லாஹ் ஒருவன் எனும் ஏகத்துவக் கொள்கையை ஏற்றுக் கொள்ளல், அவனல்லாதவரிடம் ஆதரவும் அச்சமும் கொள்ளப்படாத வகையிலும் மேலும் அவனல்லாதவருக்கு வழிபாடு செலுத்தப்படாத வகையிலும் அதில் உறுதியாக இருத்தல்.

ஆ. அல்லாஹ்வை அவனுடைய அழகிய திருநாமங்கள் மற்றும் உயர்ந்த பண்புகளுக்குத் தோதுவாக பரிபூரணமாக நேசித்தல் மற்றும் மகத்துவப்படுத்தல்.

இ. அவனுடைய ஏவல்களை எடுத்து நடந்து, அவனுடைய விலக்கல்ளை விட்டும் தவிர்ந்து கொள்வதன் மூலம் வழிபாட்டை உறுதிப்படுத்துதல்

2. மலக்குகளை நம்புவது:

அ. மலக்குகள் பற்றிய விளக்கம்: இவர்கள் நம் கண்களுக்குப் புலப்படாத ஒரு படைப்பினம். அல்லாஹ்வை வணங்கக்கூடியவர்கள். படைத்துப் பரிபாலிக்கும் சிறப்புத் தன்மைகளோ கடவுள் தன்மைகளோ எதுவும் அவர்களுக்குக் கிடையாது. அல்லாஹ் அவர்களை ஒளியால் படைத்தான். அவனது ஆணைக்கு முழுமையாகக் கட்டுப்பட்டும் தன்மையையும் அதனைச் செயல்படுத்தும் ஆற்றலையும் அவர்களுக்கு வழங்கியுள்ளான். அவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். எத்தனை பேர் என்பதை அல்லாஹ்வைத் தவிர வேறு எவரும் அறிய முடியாது.

ஆ. மலக்குமார்களை நம்புவதில் நான்கு விஷயங்கள் உள்ளன.

1. அப்படி ஒரு படைப்பு உண்டு என நம்புவது.

2. அவர்களில் யாருடைய பெயரை அறிந்துள்ளோமோ

அவர்களை அவர்களின் பெயரோடு நம்ப வேண்டும். உதா ரணம்: ஜிப்ரீல் (அலை). பெயர் அறியாத மலக்குகளைப் பொது வாக நம்ப வேண்டும்.

3. அவர்களின் தன்மைகளிலிருந்து நாம் அறிந்தவற்றை நம்புவது.

4. அல்லாஹ்வின் கட்டளைப்படி அவர்கள் என்னென்ன செயல்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என நாம் அறிந்துள்ளோமோ அவற்றை நம்புவது. உதாரணமாக மலக்குல் மௌத் எனும் உயிர்களைக் கைப்பற்றும் மலக்கு, மரணிக்கும்போது உயிர்களைக் கைப்பற்றுகிறார்.

## 3. வேதங்களை நம்புவது:

வேதங்கள் என்பதன் கருத்து அல்லாஹ் படைப்பினங் கள் இம்மையிலும் மறுமையிலும் நற்பேற்றினை அடைவதற் காக அவர்களுக்கு அருட்கொடையாகவும் நேர்வழிகாட்டி யாகவும் தனது தூதர்கள் மீது இறக்கி வைத்த வேதங்க ளாகும்.

வேதங்களை நம்புவதில் நான்கு விஷயங்கள் உள்ளன:

1. உண்மையாக அல்லாஹ்விடமிருந்தே அவை இறக்கி யருளப்பட்டன என நம்புவது.

2. எந்தெந்த வேதங்களின் பெயரை நாம் அறிந்துள் ளோமோ அவற்றை அவற்றின் பெயரோடு நம்ப வேண்டும்.

உதாரணமாக முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு குர்ஆன் இறக்கியருளப்பட்டது. மூஸா (அலை) அவர்களுக்கு தவ்றாத் இறக்கியருளப்பட்டது.

3. அந்த வேதங்கள் வழங்கும் செய்திகளிலிருந்து நம்ப கமானவற்றை உண்மையென ஏற்றுக் கொள்வது. உதார ணமாக குர்ஆனுடைய செய்திகளையும் முந்தைய வேதங்

களில் திரிக்கப்படாமல், மாற்றப்படாமல் உள்ள செய்திகளை ஏற்றுக் கொள்வது போல.

4. அவற்றில் மாற்றப்படாத சட்டங்களைக் கொண்டு செயல்பட வேண்டும். அதை ஏற்றுக் கொள்ளவும் பொருந்திக் கொள்ளவும் வேண்டும். அவற்றின் நுணக்கத்தை நாம் விளங்கினாலும் சரி அல்லது விளங்காவிட்டாலும் சரியே. முன்னர் அருளப்பட்ட வேதங்கள் அனைத்தும் மகத்தான திருக்குர்ஆனால் மாற்றப்பட்டுவிட்டன.

அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) நாம் இவ்வேதத்தை உம்மீது சத்தியத்துடன் இறக்கியுள்ளோம். இது முந்தைய வேதங்களை உண்மைப்படுத்தக் கூடியதாகவும் அவற்றை முடிவுகட்டக் கூடியதாகவும் இருக்கிறது. (5:48)

## வேதங்களை நம்புவதால் ஏற்படும் பயன்கள்:

அ. ஒவ்வொரு சமுதாயத்திற்கும் நேர்வழி காட்டும் வேதத்தை இறக்கியிருப்பதன் மூலம் அல்லாஹ் தன் அடியார்களைப் பரிவோடு கவனித்திருப்பதை அறிவது.

ஆ. ஒவ்வொரு சமுதாயத்தவருக்கும் அவர்களின் நிலைமைகளுக்கு ஏற்ற சட்டங்களையே அல்லாஹ் வகுத்தளித்துள்ளான் எனும் வகையில் அவனது ஷரீஅத்திலுள்ள நுணுக்கத்தை அறிவது. அல்லாஹ் கூறுகிறான்:

இ. உங்களில் ஒவ்வொரு கூட்டத்தாருக்கும் மார்க்கத்தையும் வழிமுறையையும் நாம் ஏற்படுத்தியுள்ளோம். (5:48)

ஈ. அல்லாஹ்வின் அருளுக்கு நன்றி செலுத்துதல்.

## 4. தூதர்களை நம்புவது:

மனிதர்களில் எவருக்கு வஹீயின் மூலம் ஷரீஅத் கொடுக்கப்பட்டு அதை மக்களுக்கு எடுத்துரைக்கும்படி ஏவப்பட்டுள்ளாரோ அவரே தூதராவார். இறைத்தூதர்களில் முதல்

தூதர் நூஹ் (அலை) அவர்களும் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களும் ஆவர்.

எந்த சமூகமும் தூதரோ அல்லது நபியோ அனுப்பப்படாமலில்லை. அல்லாஹ் அத்தூதருக்கு தனிப்பட்ட ஷரீஅத் சட்டத்தைக் கொடுத்து அவரது சமூகத்தாரிடம் அனுப்பி வைக்கிறான். அல்லது அந்த நபிக்கு முந்தைய தூதரின் ஷரீஅத்தை வஹியின் மூலம் கொடுத்து அவரது சமூகத்தாரிடம் அனுப்பிவைக்கிறான்- அந்த ஷரீஅத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்பதற்காக.

அல்லாஹ் கூறுகிறான்: மெய்யாக நாம் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் அல்லாஹ்வையே வணங்குங்கள், அவனல்லாதவர்களை வணங்குவதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள் என்று (போதிக்குமாறு) நாம் தூதர்களை அனுப்பி வைத்தோம். (16:36)

அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவர் வராத எந்த சமுதாயத்தவரும் (பூமியில்) இல்லை. (35:24)

தூதர்கள் இறைவனால் படைக்கப்பட்ட மனிதர்கள்தாம். அவர்களுக்கு படைத்துப் பரிபாலிக்கும் சிறப்புத் தன்மைகளோ வணக்கத்திற்குரிய தன்மைகளோ எதுவும் கிடையாது. இன்னும் நோய் மரணம் பசி, தாகம் போன்ற மனித இயல்பைச் சேர்ந்த தன்மைகளும் அவர்களுக்கு உண்டு.

தூதர்களை நம்புவதில் நான்கு விஷயங்கள் உள்ளன.

1. அவர்களின் தூதுத்துவம் உண்மையானதே. அது அல்லாஹ்விடமிருந்து வந்தது. இறைத்தூதர்களில் ஒருவரது தூதுவத்தை நிராகரித்தவன் அனைத்து தூதர்களையும் நிராகரித்தவனாவான். நூஹ் நபியை நிராகரித்தவர்களைப் பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்: நூஹுடைய சமூகத்தவர் இறைத்தூதர்களைப் பொய்ப்பித்தனர். (26:105)

2. அவர்களில் நாம் யாருடைய பெயரை அறிந்துள்ளோமோ அவரின் பெயருடன் அவரை நம்புவது. உதாரணமாக முஹம்மத், நூஹ், இப்றாஹீம், மூஸா, ஈஸா (அலை)போன்றவர்களை நம்புவதுபோல. இந்த ஐந்து பேரும் மன உறுதி பெற்ற தூதர்களாவர். இன்னும் அவர்களில் யாருடைய பெயரை நாம் அறியவில்லையோ அவர்களைப் பொதுவாக நம்பவேண்டும்.

அல்லாஹ் கூறுகிறான்: திட்டமாக நாம் உமக்கு முன்னர் பல தூதர்களை அனுப்பியிருக்கின்றோம், அவர்களில் சிலரின் வரலாற்றை நாம் உமக்குக் கூறியுள்ளோம். இன்னும் எவர்களுடைய வரலாற்றை உமக்குக் கூறவில்லையோ அவர்களும் அத்தூதர்களில் இருக்கின்றனர். (40:78)

3. அவர்களின் செய்திகளில் ஆதாரப்பூர்வமாக வந்துள்ளவற்றை உண்மைப்படுத்த வேண்டும்.

4. அவர்களில் எந்த தூதர் இப்போது நம்மிடம் அனுப்பப்பட்டுள்ளாரோ அவருடைய மார்க்கத்தின்படி செயல்படுவது. அவர்தாம் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள்.

## தூதர்களை நம்புவதால் ஏற்படும் பயன்கள்:

அ. அல்லாஹ் அடியார்களை மீது பொழிந்த அருளையும் அவர்களின் பால் கொண்ட பரிவையும் அறிவது.

எவ்வாறெனில் தனது அடியார்களுக்கு நேர்வழி காட்டுவதற்காகவும், அல்லாஹ்வை அவர்கள் எவ்வாறு வணங்க வேண்டும் என்பதை விளக்குவதற்காகவும் இறைத் தூதர்களை அனுப்பி வைத்தான்.

ஆ. அல்லாஹ்வின் இம்மாபெரும் அருட்கொடைக்காக அவனுக்கு நன்றி செலுத்துதல்.

இ. தூதர்களை நேசிப்பது, அவர்களைக் கண்ணியப்படுத்துவது. அவர்களின் தகுதிக்கு ஏற்ற முறையில் அவர்களைப் புகழ்வது. ஏனெனில் அவர்கள் அல்லாஹ்வின் தூதர்களாவர். இன்னும் அவர்கள் அல்லாஹ்வை வணங்கியவர்கள். அவனது தூதுவத்தை மக்களுக்கு எடுத்துரைத்தவர்கள். அடியார்களுக்கு நற்போதனை செய்தவர்களாவர்.

## 5. இறுதி நாளை நம்புவது

இறுதி நாள்- மனிதர்கள் அனைவரையும் அல்லாஹ் உயிர்ப்பித்து எழுப்பும் மறுமை நாளாகும்- கேள்வி, கணக்குக் கேட்டு அனைவருக்கும் நற்கூலி தண்டனை வழங்குவதற்காக. இதன் பிறகு வேறொரு நாள் இல்லையென்பதால் இதற்கு இறுதி நாள் என்று சொல்லப்பட்டது.

இறுதி நாளை நம்புதில் மூன்று விஷயங்கள் உள்ளன.

1. மனிதர்கள் அனைவரும் மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டு எழுப்பப்படுவதை நம்புவது: இவ்வாறு எழுப்பப்படுவது குர்ஆனும் நபிமொழியும் அறிவித்துவிட்ட உறுதியான உண்மையாகும். முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவும் இதுவே.

2. விசாரணையையும் கூலி கொடுக்கப்படுவதையும் நம்புவது. தனது செயல் குறித்து மனிதன் விசாரிக்கப்படுவான். அதன்பேரில் நற்கூலியோ தண்டனையோ வழங்கப்படுவான். குர்ஆனும் ஹதீஸும் இதனை அறிவிக்கின்றன. முஸ்லிம்களின் ஏகோபித்த முடிவும் இதுதான்.

3. சுவர்க்கம், நரகத்தை நம்புவது. இவ்விரண்டும் படைப்பினங்கள் சென்றடைய வேண்டிய நிரந்தரமான இடங்களாகும். மரணத்திற்குப் பின் உள்ள அனைத்தையும் நம்புவது இறுதி நாளை நம்புவதில் அடங்கும். கப்ருடைய சோதனை, அதன் துன்பம், இன்பம் ஆகியவற்றைப் போல.

## இறுதி நாளை நம்புவதால் ஏற்படும் பயன்கள்:

அ. அந்நாளில் இறைவன் தண்டிப்பதைப் பயந்து பாவம் செய்ய அஞ்சுதல், அது குறித்து அதிருப்தி அடைதல்.

ஆ. அந்நாளின் நற்கூலியைப் பெறுவதற்காக வணக்க வழிபாடுகளைச் செய்வதில் ஆர்வமும் ஆவலும் கொள்வது.

இ. உலகத்தின் வசதிவாய்ப்புகள் தனக்குக் கிடைக்கா மல் போவது குறித்து ஒரு முஃமின் பொறுமை கொள்வது, ஆறுதல் அடைவது- தனக்கு மறுமையில் கிடைக்கும் அருட் பேருளையும் நன்மைகளையும் எதிர்பார்த்து.

## 6. விதியை நம்புவது

விதி: அல்லாஹ் எல்லாவற்றையும் முன்னரே அறிந்திருப் பதற்கு ஏற்பவும் அவனுடைய விவேகத்தின் தேட்டப்படியும் படைப்பினங்களுக்கு அவன் நிர்ணயித்திருக்கும் ஏற்பாடு.

விதியை நம்புதில் நான்கு விஷயங்கள் உள்ளன:

1. அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் பொதுவாகவும் விரிவாகவும் ஆதிமுதல் அந்தம் வரையிலும் அறிந்திருக்கி றான் என அறிவது. அது அவனுடைய செயல்கள் சம்பந்தப் பட்ட விஷயங்களாயினும் அவனது அடியார்களின் செயல் கள் சம்பந்தப்பட்ட விஷயங்களாயினும் சரியே.

2. இந்த விவரங்களை அல்லாஹ் லவ்ஹுல் மஹ்ஃபூல் எனும் பாதுகாக்கப்பட்ட ஏட்டில் எழுதி வைத்துள்ளான் என நம்புவது.

3. நிகழுபவை அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியே தவிர நிகழுவதில்லை என நம்புவது. அவை அல்லாஹ்வு டைய செயல் சம்பந்தப்பட்டவையானாலும் சரியே. படைப்பி னங்களின் செயல் சம்பந்தப்பட்டவையானாலும் சரியே.

மேலும் உமது இறைவன் தான் நாடியதைப் படைக்கிறான். இன்னும் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். (28:68)

4. எல்லாப் படைப்பினங்களும்- அவற்றின் உள்ளமை, தன்மைகள், அசைவுகள் உட்பட அனைத்துமே அல்லாஹ்வினால் படைக்கப்பட்டவையாகும் என நம்புவது. அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ் தான் அனைத்துப் பொருள்களையும் படைப்பவன், இன்னும் அவனே எல்லாப் பொருள்களின் பாதுகாவலனுமாவான். (39:62)

## விதியை நம்புவதால் ஏற்படும் மகத்தான பயன்கள்:

அ. காரணங்களைச் செய்யும்போது அக்காரணங்களின் மீதே சார்பு கொள்ளாமல்-அல்லாஹ்வின் மீதே முழுவதுஞ் சார்பு கொள்வது. ஏனெனில் அல்லாஹ் விதித்த விதிப்படியே ஒவ்வொன்றும் நடக்கின்றது.

ஆ. தான் நாடிய காரியம் நிறைவேறிடும்போது மனிதன் தற்பெருமை கொள்ளாதிருப்பது. ஏனெனில் அது நிறைவேறியது அல்லாஹ்வின் அருளினாலாகும். அவன்தான் நன்மை மற்றும் வெற்றிக்கான காரணிகளை நிர்ணயித்து வைத்தான். அது குறித்து மனிதன் தற்பெருமை கொள்வது இந்த அருட்கொடைக்கு நன்றி செலுத்துவதை விட்டும் அவனை மறக்கடித்துவிடும்.

இ. அல்லாஹ் நிர்ணயித்த விதிப்படி காரியங்கள் நடைபெறுகிறபோது அது குறித்து மனிதன் மனநிம்மதியும் சாந்தியும் அடைவது. வானங்கள் மற்றும் பூமியின் ஆட்சியதிகாரம் யாருடைய கைவசம் உள்ளதோ அந்த அல்லாஹ்வின் நிர்ணயப்படி சந்தேகமில்லாமல் அது நடந்தே தீரும்.

அல்லாஹ் கூறுகிறான்: பூமியில் ஏற்படுகிற அல்லது உங்களின் மீது இறங்குகிற எந்த துன்பமானாலும் அதனை நாம்

உருவாக்குவதற்கு முன்பு அதைக் குறித்து ஓர் விதி ஏட்டில் எழுதி வைக்காமல் இல்லை. அப்படிச் செய்வது அல்லாஹ் வுக்கு மிக எளிதானதாகும். (இவையனைத்தும்) எதற்காகவெ னில் உங்களுக்கு ஏதேனும் நஷ்டம் ஏற்பட்டாலும் நீங்கள் மனம் துவண்டுவிடக் கூடாது. மேலும் அல்லாஹ் உங்க ளுக்கு வழங்கியிருப்பதைக் கொண்டு நீங்கள் பூரித்துப் போய்விடக் கூடாது என்பதற்காகத்தான். தம்மையே பெரி தாக நினைத்துக் கொள்கிற பெருமை பேசித் திரிகிற எவரை யும் அல்லாஹ் நேசிப்பதில்லை. (57:22-23)

விதி விஷயத்தில் இரு கூட்டத்தினர் வழி தவறிவிட்டனர்:

1. ஜப்ரிய்யா கூட்டத்தினர்: ஒரு மனிதன் தனது செயலில் நிர்ப்பந்திக்கப்படுகிறான். அதில் அவனுக்கு சுயவிருப்பமோ சுயசக்தியோ இல்லை என்று அவர்கள் கூறுகின்றனர்.

2. கத்ரிய்யா கூட்டத்தினர்: ஒரு அடியான் ஒரு செயலைச் செய்யும்போது அவன் சுயவிருப்பத்துடனும் சுயசக்தியுடனும் செய்கிறான். அதில் அல்லாஹ்வின் நாட்டமோ சக்தியோ சம் பந்தப்படவில்லை என்று கூறுகின்றனர். இன்னும் இவர்கள் அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் நிர்ணயித்து அது நிகழ் வதற்கு முன்னால் அதை அறிந்தும் வைத்திருக்கின்றான். இவ்விருகூட்டத்தினரின் கூற்று மிகப் பெரும் தவறாகும்.

## பாடம் - 4

### தவ்ஹீதின் வகைகள்

தவ்ஹீதின் வகைகள் மூன்றாகும்: அவை, தவ்ஹீதுர் ருபூபிய்யா, தவ்ஹீதுல் உலூஹிய்யா, தவ்ஹீதுல் அஸ்மா வஸிஃபாத் ஆகியவையாகும்.

---

**விளக்கம்: வணக்க வழிபாடுகளை அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே செய்வதற்கு தவ்ஹீத் எனப்படும். அதன் வகைகள் மூன்று:**

1. தவ்ஹீதுர் ருபூபிய்யா

**இது படைத்துப் பரிபாலித்து, உணவளித்து, நிர்வகிப்பவன் அல்லாஹ் மட்டுமே என நம்புவதாகும். இவ்வகைத் தவ்ஹீதை முஷ்ரிக்குகள் ஏற்றிருந்தனர். எனினும் அது அவர்களை இஸ்லாத்தில் சேர்க்கவில்லை. ஆதாரம்: அல்லாஹ் கூறுகிறான்: மேலும் அவர்களிடம், அவர்களைப் படைத்தவன் யாரென நீர் கேட்டால் நிச்சயமாக அல்லாஹ் என்றே அவர்கள் கூறுவார்கள். (43:87)**

2. தவ்ஹீதுல் அஸ்மா வஸ்ஸிஃபாத்

**அல்லாஹ் தன்னை எவ்வாறு தனது வேதத்தில் வர்ணித்துள்ளானோ அல்லது நபி(ஸல்)அவர்கள் அவனை எவ்வாறு வர்ணித்துள்ளார்களோ அதனை அவனது கண்ணியத்திற்கும் மகத்துவத்திற்கும் ஏற்ற முறையில் நம்புவதாகும். இவ்வகைத் தவ்ஹீதை சில முஷ்ரிக்குகள் ஏற்றிருந்தனர். சிலர் அறியாமையாலும் பிடிவாதத்தாலும் மறுத்தனர்.**

3. தவ்ஹீதுல் உலூஹிய்யா

**வணக்க வழிபாடுகள் அனைத்தையும் அல்லாஹ்வுக்கே உரித்தாக்குவதாகும். நேசித்தல், அஞ்சுதல், ஆதரவு வைத்தல், தவக்குல் வைத்தல், பிரார்த்தனை செய்தல் போன்றவை வணக்க வகைகளாகும். இவ்வகைத் தவ்ஹீதை இணைவைப்பவர்கள் நிராகரித்தனர்.**

ஷிர்க்கின் வகைகள்: **பெரிய ஷிர்க், சிறிய ஷிர்க், மறைமுக ஷிர்க் என ஷிர்க் மூவகைப்படும்.**

## பெரிய ஷிர்க்:

இது நலலறங்களைப் பாழாக்கி நிரந்தர நரகத்தையும் அவசியமாக்கிவிடும். அவர்கள் கூறுகிறான்:'அவர்கள் இணை வைத்திருப்பார்களாயின் அவர்கள் செய்தவை யாவும் வீணாகிப்போய் இருக்கும். (6:88) நிராகரிப்புக்கு தாங்களே சான்று வழங்கிக் கொண்டிருக்கும் இந்த முஷ்ரிக்குகளுக்கு இறையில்லங்களைப் பராமரிக்கும் உரிமையில்லை. அவர்களின் நற்கருமங்கள் அழிந்துவிட்டன. அவர்கள் நரகில் என்றென்றும் தங்கிவிடுவர். (9:17)

மேலும் எவன் இணைவைத்தவனாக மரணித்துவிடுகிறானோ அவனது பாவம் மன்னிக்கப்படமாட்டாது, அவனுக்கு சுவர்க்கம் ஹறாமாகி விட்டது. அல்லாஹ் கூறினான்: நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை மன்னிக்கமாட்டான், இதைத்தவிர (மற்ற) எதனையும் தான் நாடியோருக்கு மன்னிப்பான். (4:48) எனவே எவனொருவன் இணை கற்பிப்பானோ அவனுக்கு அல்லாஹ் நிச்சயமாக சுவனத்தை ஹறாமாக்கி விட்டான். மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமே. அநியாயக்காரர்களுக்கு உதவி புரிபவர் எவருமில்லை. (5:72)

இறந்தவர்களிடமும் சிலைகளிடமும் பிரார்த்திப்பது, அவர்களிடம் அபயம் தேடுவது, அவர்களுக்கு நேர்ச்சை செய்வது, அவர்களுக்கு அறுத்துப் பலியிடுவது போன்ற அனைத்தும் பெரிய ஷிர்க்கின் வகைகளாகும்.

## சிறிய ஷிர்க்:

இத்தகைய ஷிர்க்கை குர்ஆனும் ஹதீஸும் ஷிர்க் என்றே கூறுகின்றன. ஆயினும் இது பெரிய ஷிர்க்கைச் சார்ந்ததல்ல. ணைவைப்பின் வகையைச் சார்ந்ததல்ல. உதாரணமாக முகஸ்துதி, அல்லாஹ் அல்லாததைக் கொண்டு சத்தியம்

செய்வது, அல்லாஹ்வும் இன்னாரும் நாடியது நடந்தது எனச் சொல்வது இன்னும் இவை போன்றது.

நான் உங்களிடம் அதிகமாகப் பயப்படுவது சிறிய ஷிர்க் காகும் என நபி(ஸல்) கூறியதும் அது என்னவெனக் கேட்கப் பட்டது? அதற்கு முகஸ்துதி எனக் நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: மஹ்மூத் இப்னு லுபைத் (ரழி) *(அஹ்மத், தப்ரானி, பைஹகி)*

'அல்லாஹ் அல்லாத ஒரு பொருளின் மீது சத்தியம் செய் தவன் இணைவைத்து விட்டான்.' நபிமொழி. அறிவிப்பவர்: உமர் (ரழி), (அஹ்மத்) அல்லாஹ் அல்லாதவர் மீது யாரேனும் சத்தியம் செய்தால் அவன் காஃபிர் அல்லது முஷ்ரிக் எனவும் நபி(ஸல்) கூறினார்கள். அறிவிப்பவர்: இப்னு உமர் (ரழி), *(அபூ தாவூத், திர்மிதி)* மேலும் நபி(ஸல்) கூறினார்கள்: அல்லாஹ் நாடியதும் இன்னார் நாடியதும் நடந்தது எனக் கூறாதீர்கள். எனினும் அல்லாஹ் நாடியது நடந்தது. பின்னர் இன்னார் நாடினார் எனக் கூறிக்கொள்ளுங்கள். அறிவிப்பவர்: ஹுதைஃபா. *(அபூதாவூத்)*

இத்தகைய ஷிர்க் இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றி விடாது. நிரந்தர நரகத்தையும் அவசியமாக்காது. எனினும் முழுமையான தவ்ஹீதுக்கு இது முரணானதாகும்.

## மறைமுக ஷிர்க்

இதற்கு ஆதாரம்: தஜ்ஜாலை விட உங்களின் மீது நான் மிக அஞ்சுகின்ற ஒரு காரியத்தை உங்களுக்கு அறிவித்துத் தரட்டுமா? நபி(ஸல்) கேட்டதும் 'அல்லாஹ்வின் தூதரே! அறி வித்துத் தாருங்கள்' என்று தோழர்கள் கூறினர். அது தான் மறைமுகமான ஷிர்க். அதாவது ஒருவன் தொழுதும் போது இன்னொருவன் தன்னைப் பார்க்கிறான் என்பதற்காக அவன்

அழகாகச் செய்கிறான் (எனில் அது மறைமுக ஷிர்க்) எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஸயீத் (ரலி), *(அஹ்மத்)*

ஷிர்க்கை பெரிய ஷிர்க், சிறிய ஷிர்க் என இருவகைப் படுத்துவதும் கூடும். மறைமுகமான ஷிர்க் இவ்விரண்டிலும் அடங்கிவிடுகின்றது. சிலசமயங்களில் இது பெரிய ஷிர்க்கிலும் நிகழ்ந்து விடுகிறது-முனாஃபிக்குகளின் ஷிர்க்கைப் போன்று. ஏனெனில் அவர்கள் தாங்களின் அசத்தியக் கொள்கையை மறைத்து வைத்துக்கொண்டு முகஸ்துதிக்காகவும், பயத்திற்காகவும் வெளிப்படையில் இஸ்லாம் பேசுவார்கள்.

சில சமயம் இது சிறிய ஷிர்க்கிலும் நிகழும்-முகஸ்துதியைப் போல. மேற்கூறப்பட்ட மஹ்மூத் இப்னு லுபைத் (ரழி), அபூஸயீத் (ரழி) ஆகிய இருவர் அறிவிக்கும் ஹதீஸ்கள் இதற்கு உதாரணமாகும்.

## பாடம் – 5

### இஸ்லாத்தின் கடமைகள்

இஸ்லாத்தின் கடமைகள் ஐந்து. வணக்கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லை. முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வுடைய தூதர் என சான்று பகர்வது, தொழுகையை நிலை நாட்டுவது, ஸகாத் கொடுப்பது. ரமழானில் நோன்பு நோற்பது, சக்தி பெற்றவர்கள் ஹஜ் செய்வது.

---

ஆசிரியர் தவ்ஹீத் மற்றும் ஷிர்க்கின் வகைகளைக் கூறி முடித்ததும் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளைக் கூறத் துவங்கிவிட்டார். இஸ்லாத்தின் கடமைகள் ஐந்து என்றே ஸஹீஹான ஹதீஸிலும் வந்துள்ளது. நபி (ஸல்) அவர்கள்

கூறினார்கள்: இஸ்லாம் ஐம்பெரும் கடமைகள் மீது அமைந்துள்ளது. அவை வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை, முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதர் என சான்று பகர்வது, தொழுகையை நிலைநாட்டுவது, ஸகாத் கொடுப்பது, ஹஜ் செய்வது, ரமழானில் நோன்பு நோற்பது ஆகியனவாகும். அறிவிப்பவர் இப்னு உமர் (ரழி), *(புகாரீ, முஸ்லிம்)* ஐம்பெரும் கடமைகள் ஐம்பெரும் தூண்கள் போன்றாகும். இஸ்லாம் ஐந்து தூண்களுள்ள ஒரு கட்டடத்திற்கு ஒப்பாக்கப்பட்டுள்ளது. தூண்கள் இல்லாமல் கட்டடமிருக்காது. இஸ்லாத்தின் ஏனைய கடமைகள் அக்கட்டடத்தைப் நிறைவு செய்வது போலாகும்.

'வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் சான்று பகர்வது' என்றால் அல்லாஹ்வையும் அவனது தூதரையும் நம்புவதாகும். முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில் 'இஸ்லாம் ஐம்பெரும் கடமைகள் மீது அமைக்கப்பட்டுள்ளது. அவை, அல்லாஹ்வை ஒருமைப்படுத்துவது' எனவும் வேறொரு அறிவிப்பில் 'அல்லாஹ்வை ஏகத்துவப் படுத்தி, அவனல்லாத ஏனைய தெய்தவங்களை நிராகரிப்பது' எனவும் உள்ளது.

தொழுகையை நிலைநாட்டுதல்: ஒருவன் இறைநிராகரிப்பு மற்றும் ஷிர்க்கில் இருக்கிறான் என்பதன் அடையாளம் தொழுகையை விடுவதுதாகும் என நபி (ஸல்) கூறினார்கள்.

*அறிவிப்பவர்: ஜாபிர் (ரலி) (முஸ்லிம்)*

காரியங்களில் தலையாயது இஸ்லாம். அதன் தூண்கள் தொழுகை எனவும் நபி (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பவர்: முஆத் (ரலி) *(திர்மிதி)*

ஸஹாபாக்கள் மார்க்க விஷயங்களில் தொழுகையைத் தவிர வேறெதையும் விடுவதை குஃப்ர் எனக் கருதவில்லை என அப்துல்லாஹ் பின் ஷகீக் (ரஹ்) அவர்கள்கூறியுள்ளனர்.

ஸகாத் கொடுத்தல்: இது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் மூன்றாவது கடமையாகும். அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் தொழுகையை நிலை நிறுத்துங்கள். ஸகாத் கொடுங்கள். (2:43) வணக்கத்தை அல்லாஹ்வுக்கே உரித்தாக்கி முற்றிலும் ஒருமனப்பட்டவர்களாய் அல்லாஹ்வை வணங்க வேண்டும் மேலும் தொழுகையை நிலை நாட்ட வேண்டும், ஸகாத் வழங்க வேண்டும் என்றே அவர்கள் ஏவப்பட்டுள்ளனர். இதுதான் சரியான மார்க்கமாகும். (98:5)

ரமழானில் நோன்பு நோற்றல்: இது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் நான்காவது கடமையாகும். அல்லாஹ் கூறுகிறான்: இறைநம்பிக்கை கொண்டவர்களே! உங்களுக்கு முன்னிருந்தவர்கள் மீது கடமையாக்கப்பட்டதுபோலவே உங்கள் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது. நீங்கள் இறையச்சமுடையோராய்த் திகழ்தற்காக. (2:183)

ஹஜ் செய்தல்: இது இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஐந்தாவது கடமையாகும். அல்லாஹ் கூறுகிறான்:

அந்த ஆலயத்திற்குச் சென்று வர மக்களில் எவர்கள் சக்தி பெற்றவர்களோ அவர்கள் அல்லாஹ்வுக்காக ஹஜ் செய்வது கடமையாகும். ஆனால் எவரேனும் இதை மறுத்தால் (அதனால் அல்லாஹ்வுக்குக் குறை ஏற்படப் போவதில்லை ஏனெனில்) நிச்சயமாக அல்லாஹ் உலகத்தார் அனைவரை விட்டும் தேவையற்றவனாக இருக்கிறான். (3:97)

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளைப் பற்றி மேற்கூறப்பட்ட இந்த ஹதீஸ் இஸ்லாத்தை அறிந்து கொள்வதில் பெரும் அடிப்படையாக உள்ளது.

## பாடம் – 6

### தொழுகையின் நிபந்தனைகள்

**தொழுகையின் நிபந்தனைகள் ஒன்பது: முஸ்லிமாக இருப்பது, புத்தி சீர்நிலையில் இருப்பது, பருவ வயதை அடைந்திருப்பது, தொடக்கை அகற்றுவது, அசுத்தத்தை நீக்குவது, மறைக்க வேண்டிய உறுப்புகளை மறைப்பது, தொழுகைக்குரிய நேரம் வருவது, கிப்லாவை முன்னோக்குவது, நிய்யத் ஆகியனவாகும்.**

---

மூலாசிரியர் ஐந்தாவது பாடத்தில் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளைக் கூறிய பின்னர் இந்தப் பாடத்தில் தொழுகையின் நிபந்தனைகளைக் கூறியிருப்பது பொருத்தமானதாகும். ஏனெனில்இஸ்லாமியக் கடமைகளில் கலிமாவுக்குப் பிறகு தொழுகை மிக முக்கியமானதாகும். தொழுகைக்குரிய நிபந்தனைகளைப் பேணாமல் தொழுகை நிறைவேறாது. எனவே அவற்றை இங்கு கூறுவது பொருத்தமாகும்.

முதல் மூன்று நிபந்தனைகள்: முஸ்லிமாக இருத்தல், புத்தி சீர்நிலையில் இருத்தல், பருவ வயதை அடைந்திருத்தல் ஆகியவையாகும். எனவே கா:பிரின் தொழுகை-அவனுடைய செயல் வீணானதென்பதால்-நிறைவேறாது. இன்னும் பைத்தியக்காரனின் தொழுகையும் நிறைவேறாது-ஷரீஅத்தின் கடமைகள் அவனுக்கு இல்லாததால்-கூடாது. ‘உங்களுடைய குழந்தைகள் ஏழு வயதை அடையும்போது அவர்களைத் தொழும்படி ஏவுங்கள்’ என்ற ஹதீஸின் கருத்துப்படி சிறுவனின் தொழுகையும் நிறைவேறாது.

4. முடிந்தால் உளூ செய்வது. ‘உளூவின்றி எந்தத் தொழுகையும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது’ -நபிமொழி

5. நேரம் வருதல்: (நபியே!) சூரியன் (உச்சியிலிருந்து) சாய்ந்ததும் தொழுது கொள்வீராக! என்று அல்லாஹ் கூறுகிறான். (17:78) உமர் (ரழி) கூறினார்கள்: அல்லாஹ் தொழுகைக் கென நேரங்களை நிர்ணயித்துள்ளான். அந்த நேரத்தை விடுத்து மற்ற நேரத்தில் தொழுதால் தொழுகை கூடாது. நபி (ஸல்) அவர்களுக்கு ஜிப்ரீல் (அலை) ஐவேளை தொழுகை களை முதல் நாள் முதல் நேரத்திலும் இரண்டாம் நாள் கடைசி நேரத்திலும் தொழுது காட்டிவிட்டு பின்னர் இவ்விரண்டிற்கும் இடையே உள்ளதுதான் தொழுகையின் நேரம் எனக் கூறிய ஹதீஸ் இதற்கு ஆதாரமாகும்.

6. முடிந்தால் மேனி தெரியாதபடி ஏதெனும் ஒன்றைக் கொண்டு அவ்ரத்தை மறைப்பது. (அவ்ரத் என்பது மறைக்க வேண்டிய பகுதியாகும். ஆண் மறைக்க வேண்டிய பகுதி தொப்புளுக்கும் முட்டுக் காலுக்கும் இடையிலுள்ள பகுதியாகும். பெண் மறைக்க வேண்டிய பகுதி முன் கைகளும் முகமும் தவிரவுள்ள பகுதியாகும்)

அல்லாஹ் கூறுகிறான்: ஆதமுடைய மக்களே! ஒவ்வொரு தொழுகையின்போதும் உங்களை அலங்கரித்துக் கொள்ளுங்கள். (7:31) மேலாடை இல்லாமல் பருவமடைந்த பெண்ணின் தொழுகையை அல்லாஹ் ஏற்றுக் கொள்ள மாட்டான் என்பது நபிமொழி.

அல்லாஹ்வின் தூதரே! நான் வேட்டையாடிக் கொண்டிருக்கும்போது ஒரு ஆடையில் தொழுகிறேன். (இது கூடுமா?) எனக் கேட்டேன். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'ஆம்! கூடும். முள்ளை வைத்தேனும் அதை வேட்டியாக தைத்துக்கொள்' எனக் கூறினார்கள். அறிவிப்பவர்: ஸல்மா பின் அக்வஃ (ரலி) *(நூல்: திர்மிதி)*

அவ்ரதை மறைக்க முடிந்தும் நிர்வாணமாக தொழுபவ னின் தொழுகை வீணாகிவிடுமென்பது அறிஞர்களின் ஏகோ பித்த முடிவாகும் என இப்னு அப்துல் பர் (ரஹ்) கூறியுள்ளனர்.

7. உடல், உடை, இடம் ஆகியவற்றை அசுத்தத்தை விட்டும் நீக்குவது. (அதாவது இவையனைத்தும்சுத்தமாக இருக்க வேண்டும்) அல்லாஹ் கூறியுள்ளான்: (நபியே!) உம் ஆடைகளைச் சுத்தப்படுத்துவீராக! (74:4) ஆடையில் பட்ட மாதவிடாய் இரத்தம் பற்றி அஸ்மா (ரழி) யிடம் நபி (ஸல்) கூறும் போது, அதை விரலால் சுரண்டி, பின்னர் தண்ணீரால் சுத்தப் படுத்து. பின்பு அதிலேயே தொழுது கொள் எனக் கூறினார் கள். *(புகாரி)*

8. கிப்லாவை முன்னோக்குதல்: அல்லாஹ் கூறுகிறான்: எனவே நீர் இப்போது (மக்காவின்) மஸ்ஜிதுல் ஹராமின் பக்கம் உமது முகத்தைத் திருப்பிக் கொள்ளும் (2:144)

9. நிய்யத் (எண்ணம்): நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: செயல்கள் அனைத்தும் எண்ணத்தைப் பொறுத்தே அமை கின்றன. *(புகாரி, முஸ்லிம்)* இத்துடன் தொழுகையின் நிபந்த னைகள் நிறைவுற்றன. அல்லாஹ் மிக அறிந்தவன்.

## பாடம் - 7

### தொழுகையின் ருகுன்கள்

தொழுகையின் ருகுன்கள் - முதல் நிலைக் கடமைகள் பதினான்கு. அவையாவன: சக்தியிருக்கும்போது நின்று தொழுவது, தக்பீருத் தஹ்ரீம் எனும் முதல் தக்பீர் கூறு வது, ஒவ்வொரு ரக்அத்திலும் சூரத்துல் ஃபாத்திஹா ஓதுவது, ருகூஃ செய்வது, ருகூவிலிருந்து எழுந்து நிலையில் நிற்பது, ஏழு உறுப்புகள் தரையில் படுமாறு

ஸஜ்தா செய்வது, ஸஜ்தாவிலிருந்து எழுவது, இரு ஸஜ் தாக்களுக்கிடையே அமர்வது, எல்லா நிலைகளிலும் நிதானம் மேற்கொள்வது, கடைசி அத்தஹிய்யாத்துக் காக அமர்வது, அதில் அத்தஹிய்யாத் ஓதுவது, நபி (ஸல்)அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வது, இரு ஸலாம்கள் கொடுப்பது, இக்கடமைகள் அனைத்தையும் வரிசையாகச் செய்வது.

---

முந்தைய பாடத்தில் ஆசிரியர் தொழுகையின் நிபந்தனை கள் பற்றிக் கூறிய பின்னர் இங்கு தொழுகையின் முதல் நிலைக் கடமைகளைக் கூறுவது பொருத்தமாக உள்ளது. ஏனெனில் தொழுகையின் நிபந்தனைகள் தொழுகைக்கு முன்பு உள்ளவையாகும். தொழுகையின் முதல் நிலைக் கட மைகள் தொழுகையைச் சேர்ந்தவையாகும்.

1. சக்தியிருக்கும்போது நின்று தொழுவது: அல்லாஹ் கூறுகிறான்: (தொழுகையின்போது) அல்லாஹ்வின் முன் உள் ளச்சத்துடன் நில்லுங்கள். (2:238) இம்ரான்(ரழி) அறிவிக் கும் ஹதீஸில் 'நீ நின்று தொழு' என்று நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளனர். அனைத்து அறிஞர்களும் இதில் ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கின்றனர்.

2. தக்பீரதுல் இஹ்ராம் எனும் முதல் தக்பீர்: நபி(ஸல்) கூறினர்: தொழுகையின் திறவுகோல் உளூவாகும். (தொழு கைக்கு வெளியேயுள்ள ஆகுமான காரியங்களை) ஹராமாக்கக் கூடியது முதல் தக்பீர் ஆகும். (அவற்றை) ஹலாலாக்கக் கூடியது ஸலாம் கூறுவதாகும். *(திர்மிதி)*

நபி(ஸல்) அவர்கள் தொழுகையைச் சரிவர நிறைவேற் றாத ஒருவரிடம் தொழுகை பற்றி விளக்கிக் கூறும்போது 'நீ தொழுவதற்குத் தயாரானால் முழுமையாக உளூச் செய்து

கொள். பின்னர் கிப்லாவை முன்னோக்கி அல்லாஹு அக்பர் எனக் கூறு. *(புகாரி, முஸ்லிம்)*

3. ஒவ்வொரு ரக்அத்திலும் சூரத்துல் ஃபாத்திஹா ஓது வது: சூரத்துல் ஃபாத்திஹா ஓதாதவனுக்குத் தொழுகை இல்லை என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக உபாதாபின் ஸாமித் (ரலி) அறிவிக்கிறார்கள். *(புகாரி, முஸ்லிம்)*

4. ருகூவுச் செய்தல்: அல்லாஹ் கூறுகிறான்: ஈமான் கொண்டவர்களே! நீங்கள் ருகூவு செய்யுங்கள். (22:77) ...பிறகு ருகூஃ செய்- ருகூவில் நிதானம் ஏற்படும் வரை என (ஸல்) அவர்கள் கூறினார்கள். *(புகாரி, முஸ்லிம்)*

5. ருகூவிலிருந்து எழுந்து நிலையில் நிற்பது: ... பின்பு ருகூவிலிருந்து எழுந்து நேராக நில் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். ருகூவிலும் சுஜூதிலும் தன் முதகந்தண்டை நேராக வைக்காதவனுக்கு தொழுகை கூடாது. நபி(ஸல்) அவர்கள் கூறியதாக அபூமஸ்வூத் (ரலி) அறிவிக்கிறார்கள். (*நூல்: அபூதாவூத், திர்மிதி, நஸயீ*)

6. ஏழு உறுப்புக்களின் மீது ஸஜ்தா செய்தல்: நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: நெற்றி, இரு கைகள், இரு முட்டுக் கால்கள், இரு பாதங்களின் ஓரங்கள் ஆகிய ஏழு உறுப்புக் களின் மீது சுஜூது செய்யும்படி நான் ஏவப்பட்டுள்ளேன். (நெற்றியைக் குறிப்பிடும்போது தம் மூக்கைச் சுட்டிக்காட்டி னார்கள்) *(புகாரி, முஸ்லிம்)*

7, 8. ஸஜ்தாவிலிருந்து எழுதலும் இரு ஸஜ்தாக்களுக்கி டையில் அமர்தலும்: நபி(ஸல்) கூறினார்கள்: '...பின்னர் நீ நேராக உட்காரும் வரை ஸஜ்தாவிலிருந்து எழு' மேலும் ஆயிஷா (ரழி) அறிவிப்பதாவது: நபி(ஸல்) அவர்கள் ஸஜ்தாவி லிருந்து தலையை உயர்த்தினால் நேராக உட்காராத வரை இரண்டாம் ஸஜ்தா செய்ய மாட்டார்கள். *(முஸ்லிம்)*

**9. எல்லா நிலைகளிலும் நிதானத்தை மேற்கொள்ளல்:** ...பின்பு நீ ருகூஃ செய்- ருகூவில் நிதானம் ஏற்படும் வரை என நபீ(ஸல்) அவர்கள் கூறினார்கள். நபீ (ஸல்) அவர்கள் தமது தொழுகையில் நிதானத்தை மேற்கொள்வார்கள். மேலும் அவர்கள் கூறினார்கள்: என்னை எவ்வாறு தொழக் கண்டீர்களோ அவ்வாறே நீங்களும் தொழுங்கள். *(புகாரீ)*

**10,11. கடைசி அத்தஹிய்யாத்துக்காக அமர்வதும் அதில் அத்தஹிய்யாத்து ஓதுவதும்:** உங்களில் ஒருவர் தொழுகையில் அமர்ந்துவிட்டால் அவர்,

اَلتَّحِيَّاتُ لِلّٰهِ وَالصَّلَوَاتُ وَالطَّيِّبَاتُ اَلسَّلَامُ عَلَيْكَ أَيُّهَا النَّبِيُّ وَرَحْمَةُ اللّٰهِ
وَبَرَكَاتُهُ اَلسَّلَامُ عَلَيْنَا وَعَلَى عِبَادِ اللّٰهِ الصَّالِحِيْنَ

அத்தஹிய்யாத்து லில்லாஹி, வஸ்ஸலவாத்து, வத்தய்யிபாத்து, அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் எனக் கூறட்டும் என நபீ(ஸல்)அவர்கள் கூறினார்கள். *(புகாரீ, முஸ்லிம்)*

**12. அந்த அத்தஹிய்யாத்தில் நபீ(ஸல்)அவர்கள் மீது ஸலவாத்துக் கூறுதல்:** கஃபு பின் உஜ்ரா (ரழி) அறிவிப்பதாவது: நபீ(ஸல்)அவர்களிடம் ஸலவாத்துக் கூறுவது எப்படி? என்று தோழர்கள் கேட்டபோது,

اَللّٰهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى
آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ اَللّٰهُمَّ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَعَلَى آلِ مُحَمَّدٍ
كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்றாஹீம வஅலா

ஆலி இப்றாஹீம இன்னக்க ஹமீதும் மஜீத். அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்றாஹீம இன்னக்க ஹமீதும் மஜீத் என்று கூறுங்கள் என நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். *(புகாரி, முஸ்லிம்)*

**13, இரண்டு ஸலாம்கள் கொடுத்தல்:** தொழுகையின் திறவுகோல் உளூவாகும். (தொழுகைக்கு வெளியேயுள்ள ஆகுமான காரியங்களை) ஹராமாக்கக் கூடியது முதல் தக்பீர் ஆகும். (அவற்றை) ஹலாலாக்கக் கூடியது ஸலாம் கூறுவதாகும் என நபி(ஸல்)கூறினார்கள். *(திர்மிதி)* நபி(ஸல்)அவர்கள் தமது தொழுகையை ஸலாம் கூறுவதன் மூலம் முடித்துக் கொள்வார்கள் என ஆயிஷா(ரழி) அவர்கள் கூறினார்கள். எனவே ஸலாம் கொடுப்பதுதான் தொழுகையிலிருந்து விடுபடுவதற்கு மார்க்கமாக்கப்பட்டதாகும். அதுவே தொழுகையின் இறுதியும் தொழுகை முடிந்து விட்டதற்கு அடையாளமும் ஆகும்.

**14. இக்கடமைகளை வரிசைக்கிரமமாகச் செய்தல்**

## பாடம் - 8

### தொழுகையின் வாஜிபுகள்

தொழுகையின் வாஜிபுகள்- இரண்டாம் நிலைக் கடமைகள் எட்டாகும். தக்பீரதுல் இஹ்ராம் எனும் முதல் தக்பீர் நீங்கலாக ஏனைய தக்பீர்கள், ருகூவில் சுப்ஹான ரப்பியல் *அளீம்* என்று கூறுவது, இமாமாகவோ தனியாகவோ நின்று தொழும்போது ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா என்று கூறுவது, ருகூவிலிருந்து எழுந்ததும் ரப்பனா லகல் ஹம்து எனக் கூறுவது, சுஜூதில் சுப்ஹான ரப்பியல்

**அஃலா என்று கூறுவது, இரு ஸஜ்தாக்களுக்கிடையே ரப்பிக்ஃபிர்லீ என்று கூறுவது, முதல் அத்தஹிய்யாத்துக் காக அமர்வது, அதில் அத்தஹிய்யாத்து ஓதுவது,**

---

மூலாசிரியர் தொழுகையின் ருகுன்களை விளக்கி முடித்த பின்னர் தொழுகையின் வாஜிபுகளைக் கூறியுள்ளார். ஏனெனில் ருகுன்கள் வாஜிபுகளை விட கடமைகள் மிக முக்கியமானதாகும். ஒருவர் வாஜிபுகளில் ஒன்றை மறதியாக விட்டு விட்டால் மறதிக்கான சுஜூத் செய்தால் நிவர்த்தியாகிவிடும். ஆனால் ருகுன்களில் ஒன்றை மறதியாக விட்டாலும் அல்லது வேண்டுமென்றே தொழுகையே பாழாகிவிடும்.

1. தக்பீரதுல் இஹ்ராம் நீங்கலாக ஏனைய தக்பீர்கள்: நபீ(ஸல்)அவர்கள் குனியும்போதும் நிமிரும்போதும் உட்காரும்போதும் எழும்போதும் தக்பீர் கூற நான் பார்த்திருக்கிறேன். அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத் (ரலி) *(அஹ்மத், திர்மிதி)*

2. 3. ருகூவில் சுப்ஹான ரப்பியல் அளீம் என்றும் சுஜூதில் சுப்ஹான ரப்பியல் அஃலா என்றும் ஒரு தடவை கூறுவதாகும். நபீ(ஸல்)அவர்கள் ருகூவில் சுப்ஹான ரப்பியல் அளீம் என்றும், சுஜூதில் சுப்ஹான ரப்பியல் அஃலா என்றும் கூறுபவர்களாக இருந்தனர். அறிவிப்பவர்: ஹுதைஃபா (ரழி) திர்மிதி

4. இமாமாகவோ தனியாகவோ நின்று தொழும்போது ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதாஹ் என்று கூறுவது. நபீ(ஸல்) அவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது தக்பீர் கூறுவார்கள் பின்பு ருகூவுச் செய்யும்போதும் தக்பீர் கூறுவார்கள். பிறகு ருகூவிலிருந்து தமது முதுகை உயர்த்தும்போது ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதாஹ் எனக் கூறுவார்கள். பின்பு நின்றவாறு ரப்பனா வலகல் ஹம்த் எனக் கூறுவார்கள்.

அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி) *(புகாரீ, முஸ்லிம்)*

5. ருகூவிலிருந்து எழுந்ததும் ரப்பனா லகல் ஹம்த் எனக் கூறுவது. முன்னர் கூறப்பட்ட ஹதீஸே இதற்கும் ஆதாரமாகும்.

6. இரு ஸஜ்தாக்களுக்கிடையில் ரப்பிஃக் ஃபிர்லீ என்று கூறுதல்: நபி(ஸல்) அவர்கள் இரு ஸஜ்தாக்களுக்கிடையில் ரப்பிஃக் ஃபிர்லீ, ரப்பிஃக் ஃபிர்லீ என்று கூறுபவர்களாக இருந் தனர். அறிவிப்பவர்: ஹுதைஃபா (ரழி) *(நஸாயீ, இப்னுமாஜா)*

7. முதல் அத்தஹிய்யாத்துக்காக அமர்வது: நபி (ஸல்) கூறினார்கள்:ஒவ்வொரு இரண்டு ரக்அத்துகளிலும் நீங்கள் அமர்ந்தால் அத்தஹிய்யாத்து ஓதிக் கொள்ளுங்கள்.

அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத் (ரழி) *(அஹ்மத், நஸாயீ)*

மேலும் நபி(ஸல்)அவர்கள் ளுஹர் தொழுகையில் இந்த இருப்பை மறந்தபோது ஸலாம் கொடுக்கு முன் மறதிக்காக இரண்டு ஸஜ்தாக்கள் செய்துள்ளனர்.

8. அதில் அத்தஹிய்யாத்து ஓதுவது: நீ தொழுகைக்கு நின்றால் தக்பீர் கூறு. பின்பு குர்ஆனில் உனக்கு இலகுவா னதை ஓது. தொழுகையின் நடுவில் (இரண்டு ரக்அத் முடிந்த பிறகு) நீ அமர்ந்தால் அமைதியாக இடது பாதத்தின் மீது அமர்ந்து வலது பாதத்தை நட்டு வைத்துக் கொண்டு அத் தஹிய்யாத்து ஓது. நபிமொழி *(அபூதாவூத்)*

## பாடம் - 9

அத்தஹிய்யாத்

اَلتَّحِيَّا تُ لِلّٰهِ وَ الصَّلَوٰاتُ وَ الطَّيِّبَا تُ السَّلَامُ عَلَيْكَ اَيُّهَا النَّبِىُّ وَرَحْمَةُ
اللّٰهِ وَبَرَكَاتُهُ السَّلَامُ عَلَيْنَا وَعَلٰى عِبَادِ اللّٰهِ الصَّا لِحِيْنَ أَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا
اللّٰهُ، وَأَشْهَدُ اَنَّ مُحَمَّداً عَبْدُهُ وَرَسُولُهُ

அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத் தய்யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு அஸ்ஸலாமு அலை னா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரசூலுஹு

(பொருள்: காணிக்கைகள் தொழுகைகள் நற்பணிகள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியனவாகும். நபியே! சாந் தியும் அல்லாஹ்வின் கருணையும், அருட்பேறுகளும் உங் கள் மீது உண்டாவதாக! இன்னும் எங்கள் மீதும் அல்லாஹ் வின் நல்லடியார்கள் மீதும் சாந்தி உண்டாவதாக! வணக் கத்திற்குத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை எனவும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ் வின் அடியாரும் அவனது தூதருமாவார்கள் எனவும் நான் சாட்சி சொல்கிறேன்) பின்பு நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்ல வேண்டும்.

اَللّٰهُمَّ صَلِّ عَلَى مُحَمَّدٍ وَ عَلَى آلِ مُحَمَّدٍ كَمَا صَلَّيْتَ عَلَى إِبْرَاهِيْمَ
وَعَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ، وَ بَارِكْ عَلَى مُحَمَّدٍ وَ عَلَى آلِ
مُحَمَّدٍ كَمَا بَارَكْتَ عَلَى إِبْرَاهِيْمَ وَ عَلَى آلِ إِبْرَاهِيْمَ إِنَّكَ حَمِيْدٌ مَجِيْدٌ

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத், வபாரிக் அலா முஹம்மதின், வஅலா ஆலி முஹம்மதின் கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதும் மஜீத்.

(பொருள்: யாஅல்லாஹ்! இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர்மீதும் அருள் புரிந்ததுபோல முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர் மீதும் மீதும் நீ அருள் புரிவாயாக! நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மாட்சிமைக்குரியவனுமாவாய். இன்னும் இப்ராஹீம் (அலை) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர்மீதும் மீதும் கிருபை செய்ததுபோல முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும் அவர்களது குடும்பத்தினர்மீதும் மீதும் கிருபை செய்வாயாக! நிச்சயமாக நீ புகழுக்குரியவனும் மாட்சிமைக்குரியவனும் ஆவாய்)

பின்னர் கடைசி அத்தஹிய்யாத்தில் நரகம் மற்றும் மண்ணறையின் வேதனையிலிருந்தும் வாழ்க்கை மற்றும் மரணத்தின் சோதனையிலிருந்தும் தஜ்ஜாலின் குழப்பத்திலிருந்தும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடவேண்டும். அதன் பிறகு தான் விரும்பிய துஆவைக் கேட்க வேண்டும். குறிப்பாக ஹதீஸில் வந்துள்ள துஆவாக இருக்க வேண்டும். பின்வரும் துஆ ஹதீஸிலுள்ளது.

أَللّٰهُمَّ أَعِنِّي عَلى ذِكْـرِكَ وَشُـكْـرِكَ وَحُسْنِ عِبَادَتِكَ، أَللّٰهُمَّ إِنِّي
ظَلَـمْتُ نَفْسِي ظُـلْمًا كَثِيْرًا، وَلا يَغْفِرُ الذُّنُوبَ إلا أَ نْتَ فَاغْفِرْ لِي
مَغْفِرَةً مِنْ عِنْدِكَ، وَا رْحَمْنِي إِنَّكَ أَنْتَ الغَفُورُ الرَّحِيم

அல்லாஹும்ம அஇன்னீ அலா திக்ரிக வஷுக்ரிக வஹுஸ்னி இபாததிக அல்லாஹும்ம இன்னீ ழலம்த்து நஃப்ஸீ ழுல்மன் கஸீரன் வலா யஃக்பிருத் துனூப இல்லா அன்த ஃபஃக்ஃபிர்லி மஃக்ஃபிரதன் மின்இன்திக வர்ஹம்னீ இன்னக அன்தல் ஃகஃபூருர் ரஹீம்.

(பொருள்: யா அல்லாஹ்! உன்னைத் துதிக்கவும், உனக்கு நன்றி செலுத்தவும், உன்னை நன்றாக வணங்கவும் எனக்கு உதவி செய்வாயாக! : யா அல்லாஹ்! எனக்கு நானே அதிக அளவு அநீதி இழைத்து விட்டேன். பாவங்களை மன்னிப்பவர் உன்னைத் தவிர யாருமில்லை. எனவே உனது பிரத்தியேக மன்னிப்பில் என்னை மன்னித்தருள்வாயாக! நிச்சயமாக நீயே மிகவும் மன்னிப்பவனும் கருணை பொழிபவனும் ஆவாய்)

முதல் அத்தஹிய்யாத்தில் இரு ஷஹாதத்துகளையும் ஓதிய பின் ளுஹர், அஸர், மஃக்ரிப், இஷா போன்ற தொழுகைகளில் மூன்றாவது ரக்அத்து தொழுவதற்காக எழ வேண்டும். நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்து ஓதினால் அது சிறப்பானதே. ஏனெனில் அதுபற்றி பொதுவாகவே ஹதீஸ் வந்துள்ளது. பின்பு மூன்றாவது ரக்அத்துக்காக எழ வேண்டும்.

---

இப்னு மஸ்வூத் (ரழி) அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் எங்களின் பக்கமாகத் திரும்பிக் கூறினார்கள்: உங்களில் ஒருவர் தொழுதால் அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸூலுஹு எனக் கூறி பின்னர் தனக்கு விருப்பமான துஆவைக் கேட்டுக் கொள்ளட்டும். *(புகாரி, முஸ்லிம்)* அத்தஹிய்யாத் சம்பந்தமாக அறிவிக்கப்பட்ட ஹதீஸ்களில் இப்னு மஸ்வூத் (ரழி) அவர்களின் ஹதீஸே மிகச் சரியானதாகும்.

அல்லாஹ்வின் தூதரே! உங்களின் மீது நாங்கள் ஸல வாத்துச் சொல்ல வேண்டுமென அல்லாஹ் எங்களுக்கு கட்டளை இட்டுள்ளான். உங்களின் மீது நாங்கள் எவ்வாறு ஸலவாத்துச் சொல்வது? என பஷீர் பின் ஸஃது (ரழி) கேட் டதும் நபி (ஸல்) அவர்கள் சிறிது மௌனமாக இருந்து விட்டு பின்னர் கூறினார்கள்: அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்ம தின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா ஆலி இப்ராஹீம, வபாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம் மமதின் கமா பாரக்த அலா ஆலி இப்ராஹீம ஃபில் ஆலமீன இன்னக ஹமீதும் மஜீத் எனக் கூறுங்கள். ஸலாம் சொல் வதோ நீங்கள் அறிந்தது போன்றே. அறிவிப்பவர்: அபூமஸ் வூத் (ரழி) *(முஸ்லிம்)*

உங்களில் ஒருவர் அத்தஹிய்யாத் ஓதும்போது நான்கு காரியங்களிலிருந்து பாதுகாவல் தேடட்டும். அதாவது அவர்

أَعُوْذُ بِاللهِ مِنَ عَذَابِ جَهَنَّمَ وَمِنْ عَذَابِ الْقَبْرِ وَمِنْ فِتْنَةِ الْمَحْيَا وَالْمَمَاتِ
وَمِنْ فِتْنَةِ مَسِيْحِ الدَّجَّالِ

அல்லாஹும்ம இன்னீ அவூது பிக மின் அதாபி ஜஹன் னம வமின் அதாபில் கப்ரி வமின் ஃபித்னத்தில் மஹ்யா, வல் மமாத்தி, வமின் ஃபித்னத்தில் மஸீஹித் தஜ்ஜால்

எனக் கூறட்டும் என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். *அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரழி) (புகாரி.முஸ்லிம்)*

இது நபி (ஸல்) அவர்களின் மீது ஸலவாத்துச் சொன்ன பிறகாகும்.

தொழுகையில் நான் ஓதவதற்காக ஒரு துஆவை எனக் குக் கற்றுத் தாருங்கள் என நபி (ஸல்) அவர்களிடம் கேட் டேன். அதற்கவர்கள் அல்லாஹும்ம இன்னீ ழலம்து நஃப்ஸீ ழுல்மன் கஸீரன் வலா யஃக்ஃபிருத் துனூப இல்லா அன்த

ஃபஃக்ஃபிர்லீ மஃக்ஃபிரதன் மின் இன்திக்க வர்ஹம்னீ இன்னக அன்தல் ஃகஃபூருர் ரஹீம் எனக் கூறு என்றார்கள். அறிவிப்ப வர்: அபூபக்ர் (ரழி) *(புகாரி, முஸ்லிம்)*

இந்த ஹதீஸ் பொதுவாகத் தொழுகையில் துஆச் செய் வது மார்க்கமாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஆதாரமா கும். துஆச் செய்வதற்குரிய இடங்களில் இதுவம் ஒன்றா கும். அதாவது அத்தஹிய்யாத்தில் ஸலவாத்து மற்றும் பாது காப்புத் தேடுதலுக்குப் பிறகாகும். இதற்கு முன்னர் கூறப் பட்ட இப்னு மஸ்வூத் (ரழி) அறிவிக்கும் ஹதீஸ் இதற்கு ஆதா ரமாகும். மேலும் அந்த ஹதீஸ் அதற்கும் ஆதாரமாகும். அதாவது தொழுகையில், ஹதீஸில் வந்த துஆவையும் ஹதீ ஸில் வராத அதே சமயம் மார்க்கத்தில் தடையில்லாத துஆ வையும் கேட்கலாம்.

## பாடம் - 10

### தொழுகையின் சுன்னத்துகள்

1. ஆரம்பமாக ஓதும் துஆ

2. நிலையின்போது வலது உள்ளங்கையை இடது உள்ளங்கையின் மீது வைத்து நெஞ்சின் மீது கட்டிக் கொள்ளுதல்.

3. ஆரம்ப தக்பீரின்போதும் ருகூவின்போதும், அதிலி ருந்து எழும்போதும், முதல் அத்தஹிய்யாத்திலிருந்து மூன்றாம் ரக்அத்திற்கு எழும்போதும் இரு கைகளையும் இரு தோள் புஜங்களுக்கு அல்லது இரு காதுகளுக்கு நேராக உயர்த்துதல். கைவிரல்களை (விரிக்காமல்) சேர்த்து வைக்க வேண்டும்.

4. ருகூஃ, சுஜூதின் தஸ்பீஹை ஒன்றுக்கு மேல் அதிகமாக்கிக் கொள்வது.

5. ருகூவிலிருந்து எழுந்ததும் ரப்பனா வலகல் ஹம்த் என்று கூறிய பிறகு ஓத வேண்டிய திக்ர்.

6. இரு ஸஜ்தாக்களுக்கிடையே ரப்பிஃக்ஃபிர்லீ எனக் கூறுவதை ஒன்றுக்கு மேல் அதிகமாக்கிக் கொள்வது.

7. ருகூவில் தலையை முதுகுக்கு நேராக வைத்துக் கொள்வது.

8. சுஜூதில் இரு குடங்கைகளை இரு விலாப்புறங்களை விட்டு அகற்றியும், வயிற்றைத் தொடையின் மீது தாங்காமலும் வைத்துக் கொள்வது.

9. சுஜூது செய்யும்போது இரு முழங்கைகளையும் தரையில் படாதவாறு உயர்த்தி வைத்தல்.

10. முதல் அத்தஹிய்யாத்திலும் இரு ஸஜ்தாக்களுக்கிடையிலும் இடது காலின் மீது அமர்ந்து வலது காலை நட்டி வைத்துக் கொள்ளுதல்.

11. கடைசீ இருப்பில் பித்தட்டை தரையில் வைத்து இடது காலை வலது கரண்டைக் காலுக்குக் கீழ் வெளிப் படுத்தி வலது காலை நட்டி வைத்து அமர்வது. இந்த இருப்பிற்கு தவர்ருக் எனப்படும்.

12. முதல் அத்தஹிய்யாத்தில் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்லுதல்.

13. கடைசீ அத்தஹிய்யாத்தில் துஆச் செய்தல்.

14. ஃபஜ்ருத் தொழுகை, ஜும்ஆத் தொழுகை, இரு பெருநாள் தொழுகைகள், மழைத் தொழுகை, மக்ரிப், இஷாவின் முந்திய இரு ரக்அத்துகள் ஆகியவற்றில் சப்தமிட்டு ஓதுதல்.

15. ளுஹர், அஸர், மக்ரிபின் மூன்றாம் ரக்அத், இஷா வின் பிந்திய இரு ரக்அத்துகள் ஆகியவற்றில் சப்தமில் லாமல் ஓதுதல்.

16. சூரத்துல் ஃபாத்திஹாவுக்குப் பிறகு ஏதாவது ஒரு சூராவை ஓதுவது.

நாம் கூறாத இன்னும் பல சுன்னத்துகள் உள்ளன அவற்றையும் பேண வேண்டும்.

---

தொழுகையில் உள்ள சுன்னத்துகள் இரு வகைப்படும். 1. சுன்னத்தான திக்ருகள். 2. சுன்னத்தான செயல்கள். இவற்றை மூலாசிரியர் தனது மூலத்தில் கூறியுள்ளார். தொழு பவர் இந்த சுன்னத்துக்களைச் செய்வது கட்டாயமல்ல. இவற்றைச் செய்தால் கூலி உண்டு. விட்டு விட்டால் குற்ற மில்லை. ஏனைய சுன்னத்துகளும் இதுபோலவே. ஆனாலும் ஒரு முஸ்லிம் சுன்னத்துகளைப் பேணுவது அவசியமாகும். 'எனது சுன்னத்தையும் நேர்வழி பெற்ற கலீஃபாக்களின் சுன்னத்தையும் கடை பிடியுங்கள். அவற்றைக் கடவாய்ப் பற் களால் பற்றிப்பிடித்துக் கொள்ளுங்கள்' என்ற நபீ(ஸல்) அவர்களின் கூற்றை நினைவில் கொள்ள வேண்டும்.

## பாடம் - 11

### தொழுகையை வீணாக்கக்கூடியவை

தொழுகையை வீணாக்கக்கூடிய காரியங்கள் எட்டு. 1. வேண்டுமென்றே தெரிந்து கொண்டே பேசுவது. தெரி யாமல் அல்லது மறதியாகப் பேசினால் தொழுகை வீணா காது 2. சிரித்தல் 3. சாப்பிடுதல் 4. குடித்தல் 5. மறைக் கப்பட வேண்டிய உறுப்புகள் வெளிப்படுதல் 6. முழு

உடலுடன் கிப்லாவை விட்டும் திரும்புதல் 7. தேவையற்ற வீணான செயல்கள் அதிகமாக தொடர்ந்து நடைபெறுதல் 8. உளூ நீங்கிவிடுதல்.

---

ஆசிரியர் தொழுகையின் நிபந்தனைகள், ருகுன்கள், வாஜிபுகள், சுன்னத்தான திக்ருகள், செயல்கள் ஆகியவற்றைக் கூறி முடித்த பின்னர் தொழுகையை வீணாக்கக் கூடியவைகளைக் கூற ஆரம்பித்துள்ளார். ஏனெனில் ஒரு முஸ்லிம் தொழுகையை முறித்து விடக்கூடிய எட்டுக் காரியங்களில் ஏதேனும் ஒன்றைச் செய்துத் தனது தொழுகையைப் பாழ்படுத்துவதிலிருந்து தவிர்ந்து கொள்வதற்காக. அவை பின்வருமாறு:

1. வேண்டுமென்றே, தெரிந்து கொண்டே பேசுதல்: ஸைத் பின் அர்கம் (ரழி) அறிவிக்கிறார்கள். (தொழுகையில்) நாங்கள் மௌனமாக இருப்பதற்கு ஏவப்பட்டோம். பேசுவதற்குத் தடுக்கப்பட்டோம். *(புகாரி, முஸ்லிம்)*

2. சிரித்தல்: இது தொழுகையை வீணாக்கி விடுமென்பதில் அனைவரும் ஒத்த கருத்து கொண்டுள்ளனர் என இப்னு முன்திர் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

3, 4. உண்பது, குடிப்பது: நாங்கள் யாரிடத்திலிருந்து படித்துள்ளோமோ அவர்கள் அனைவரும் கடமையான தொழுகையில் வேண்டுமென்றே யாரேனும் உண்ணவோ, குடிக்கவோ செய்தால் அவர் அதைத் திருப்பித் தொழ வேண்டுமென ஒருமித்த கருத்து கொண்டுள்ளனர் என பின் முன்திர் (ரஹ்) அவர்கள் கூறினார்கள்.

5. அவ்ரத் திறந்துவிடுதல்: ஏனெனில் அவ்ரத்தை மறைப்பது தொழுகையின் ஷர்த்துகளில் ஒன்றாகும். எனவே ஷர்த் இல்லாமலாகிவிட்டால் தொழுகையும் இல்லாமலாகிவிடும்.

6. முழு உடலுடன் கிப்லாவை விட்டும் திரும்பி விடுதல்: இதுவும் தொழுகையின் ஷர்த்துகளில் ஒன்றாகும்.

7. தேவையற்ற வீணான செயல்கள் அதிகமாக தொடர்ந்து ஏற்படுதல்: இதுவம் அறிஞர்களின் ஏகோபித்த முடிவின்படி தொழுகையைப் பாழாக்கிவிடும். இப்னு முந்திர் அவர்கள் இதை கா:பீ என்ற நூலில் கூறியுள்ளார். இது குறைவாக ஏற்பட்டால் தொழுகை வீணாகாது. ஏனெனில் நபி(ஸல்) உமாமா என்ற சிறுமியைச் சுமந்து கொண்டு தொழுதுள்ளனர். அவர்கள் தொழுகையில் நிற்கும்போது அச்சிறுமியைச் சுமந்து கொள்வார்கள். சுஜூதுக்குச் சென்றால் கீழே இறக்கி விடுவார்கள்.

8. உளூ நீங்கிவிடுதல்: இதுவும் தொழுகை நிறை வேறுவதற்கு ஷர்த்தாகும். எனவே உளூ முறிந்து விட்டால் தொழுகையும் முறிந்விடும்.

## பாடம் - 12

### உளுவின் நிபந்தனைகள்

உளூவின் நிபந்தனைகள் பத்தாகும். 1. முஸ்லிமாக இருத்தல் 2. புத்தி சீர்நிலையில் இருத்தல் 3. பருவமடைந்திருத்தல் 4. நிய்யத் 5. உளூச் செய்து முடிக்கும் வரை நிய்யத் நீங்காதிருத்தல் 6. உளூவை அவசியமாக்கும் காரியம் ஏற்படாதிருத்தல் 7. (தேவைப்படின்) உளூவுக்கு முன் தண்ணீராலோ கற்களாலோ மலஜலத் துப்பரவு செய்திருத்தல் 8. தண்ணீர் சுத்தமானதாகவும் ஆகுமானதாகவும் இருத்தல் 9. உறுப்புக்களில் தண்ணீர் சென்றடைவதற்குத் தடையாக இருக்கும் பொருளை நீக்குதல் 10. தொடர்ந்து சிறுநீர் அல்லது காற்று அல்லது இரத்தம்

வெளியேறுபவருக்கு தொழுகையின் நேரம் வந்திருக்க வேண்டும்.

---

உளூவின் நிபந்தனைகள்: முஸ்லிமாக இருத்தல், புத்தி சீர்நிலையில் இருத்தல், பருவ வயதை அடைதல், நிய்யத்: எனவே கா:பிரின் உளூ ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. ஏனெனில் அவன் முஸ்லிமாகாத வரை அவனிடமிருந்து எதுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பைத்தியக்காரனின் உளூவும் நிறைவேறாது. ஏனெனில் அவன் மார்க்க சட்டத்திற்கு உட்பட்டவனல்ல. இன்னும் பருவமடையாத சிறுவனின் உளூவும் நிறை வேறாது. உளூ பற்றிய நிய்யத் இல்லாமல் குளிர்ச்சிக்காகவோ அல்லது அசுத்தத்தை, அழுக்கை நீக்குவதற்காகவோ உளூச் செய்தாலும் நிறைவேறாது.

தண்ணீர் சுத்தமானதாக இருத்தல்: அசுத்தமாக இருந்தால் கூடாது.

தண்ணீர் ஆகுமானதாக இருத்தல்: அது பறிமுதல் செய்யப்பட்டதாகவோ அல்லது மார்க்கம் அனுமதிக்காத வழியில் கிடைத்திருந்தாலோ அதிலிருந்து உளூ செய்வது கூடாது.

முன்னதாக தண்ணீரால் அல்லது கல்லால் மலஜலத் துப்பரவு செய்திருத்தல் வேண்டும் என்பதும் ஒரு ஷர்த்.

உறுப்புக்களில் தண்ணீர் சென்றடைவதற்குத் தடையாக இருக்கும் பொருளை அகற்றுதல்:

உளூச் செய்யக்கூடியவன் உளூவின் உறுப்புக்களில் களிமண், குழைத்த மாவு, மெழுகு, நகபாலிஷ் போன்ற சாயம் இன்னும் இதுபோன்றவை இருந்தால் அவற்றை நீக்குவது அவசியமாகும். காரணம் தண்ணீர் எவ்விதத் தடையுமில்லாமல் உறுப்புக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக.

தொடர்ந்து சிறுநீர் அல்லது காற்று அல்லது இரத்தம் வெளியேறுபவருக்கு தொழுகையின் நேரம் வந்திருத்தல்: ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் தொடர் உதிரப்போக்குடைய பெண்ணை ஒவ்வொரு தொழுகைக்கும் உளூச் செய்யும்படி ஏவியுள்ளார்கள். அல்லாஹ் மிக அறிந்தவன்.

## பாடம் - 13

### உளூவின் ஃபர்ழுகள்

உளூவின் ஃபர்ழுகள் ஆறு. 1. முகத்தைக் கழுவுதல்- இதில் உட்பட்டதுதான் வாய் கொப்பளித்தலும், நாசிக் குத் தண்ணீர் செலுத்துதலும். 2. இரு கைகளை முழங் கைகள் வரை கழுவுதல் 3. தலை முழுவதையும் (ஈரக் கையால்) தடவுதல்- இரு காதுகளுக்கு மஸஹ் செய்வ தும் இதில் அடங்கும். 4. கரண்டைக்கால் வரை இரு கால்களையும் கழுவுதல் 5. இவற்றை வரிசைக்கிரமமா கச் செய்தல் 6. தொடராகச் செய்தல்

முகம், இரு முழங்கைகள், இரு கால்கள் ஆகியவற் றை மூன்று முறை கழுவதும் வாய்க் கொப்பளித்தல் நாசிக்குத் தண்ணீர் செலுத்துதல் ஆகியவற்றையும் மூன்று முறை செய்வதும் விரும்பத்தக்கதாகும். எனினும் இவையனைத்தையும் ஒரு முறை செய்தால் ஃபர்ழு நிறை வேறிவிடும். தலையை பலமுறை தடவுவது விரும்பத்தக் கதல்ல- ஆதாரபூர்வமான ஹதீஸ்கள் அறிவிப்பதுபோல.

---

உளூவின் ஃபர்ழுகள்: அல்லாஹ் கூறுகிறான்: ஈமான் கொண்டவர்களே! நீங்கள் தொழுகைக்குத் தயாரானால் உங்கள் முகங்களையும், முழங்கைகள் வரை உங்கள் இரு

கைகளையும் கழுவிக் கொள்ளுங்கள். உங்களின் தலைகளை (ஈரக்கையால்) தடவிக் கொள்ளுங்கள். உங்கள் கால்களை இரு கணுக்கால் வரை (கழுவிக்கொள்ளுங்கள்) (5:6)

1. முகத்தைக் கழுவுதல்-இதில் உட்பட்டதுதான் வாயும் மூக்கும். அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் முகங்களைக் கழுவிக் கொள்ளுங்கள். (5:6) வாயும் நாசியும் முகத்திலுள்ளதாக இருப்பதால் அவ்விரண்டையும் கழுவதும் கடமையாகும். மேலும் நபி (ஸல்) அவர்களின் உளூவைப் பற்றிக் கூறிய அனைத்து நபித்தோழர்களும் வாய்க் கொப்பளித்தலையும் நாசிக்குத் தண்ணீர் செலுத்துவதையும் கூறியுள்ளனர். நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரழி) அறிவிக்கிறார்கள்: உங்களில் ஒருவர் உளூச் செய்தால் அவர் தனது மூக்கிற்குத் தண்ணீர் செலுத்தி மூக்கைச் சிந்திக் கொள்ளட்டும். *(முஸ்லிம்)*

2. இரு கைகளையும் கழுவுதல்: அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் இரு கைகளையும் முழங்கைகள் வரைக் கழுவிக் கொள்ளுங்கள். (5:6) அதாவது முழங்கைகளுடன். எனவே முழங்கைகள் வரை கைகளைக் கழுவது கடமையாகும். நபி (ஸல்) அவர்களும் உளூவின்போது தமது முழங்கைகளைக் கழுவுபவர்களாக இருந்தனர்.

3. இருகாதுகள் உட்பட தலை முழுவதும் தடவுதல்: 'உங்களின் தலைகளைத் தடவிக் கொள்ளுங்கள்' என அல்லாஹ் கூறியிருப்பதால் இரு காதுகளும் தலையிலுள்ளது தான். மேலும் 'இரு காதுகளும் தலையிலுள்ளதே' என்பது நபிமொழி. நபி (ஸல்) அவர்கள் உளூச் செய்யும்போது தமது தலைக்கும் இரு காதுகளுக்கும் மஸஹ் செயபவார்கள்.

4. இரு கால்களையும் கரண்டை வரை கழுவுதல்: அல்லாஹ் கூறினான்: உங்கள் கால்களையும் கரண்டை

கழுவிக் கொள்ளுங்கள். (5:6) எனவே கால்களை கரண்டை வரை கழுவதும் கடமையாகும்.

5. வரிசைக் கிரமமாகச் செய்தல்: ஏனெனில் அல்லாஹ் வரிசைக் கிரமமாகவே கூறியுள்ளான். கழுவ வேண்டிய இரு உறுப்புக்களுக்கிடையே (அதாவது முகம், கால்) தடவ வேண் டியதை (அதாவது தலையை) நுழைத்துள்ளான். (கழுவதில்) ஒப்பான ஒன்றை மற்றொன்றை விட்டும் (அதாவது முகம் கால்களை) பிரித்துக் கூறியுள்ளான். எனவே இதன் மூலம் நமக்குத் தெரியவருவது உளூவை வரிசைக்கிரமமாகச் செய்ய வேண்டும் என்பதாகும். நபீ (ஸல்) அவர்களும் இந்த முறைப்படி உளூவை வரிசைக்கிரமமாகச் செய்துள்ளனர்.

6. தொடராகச் செய்தல்: அதாவது முந்தைய உறுப்பு காய்வதற்குள் அடுத்த உறுப்பைக் கழுவிவிடுவதாகும். பிற்ப டுத்தாமலிருப்பதாகும். நபீ (ஸல்) அவர்கள்தான் தமது உம் மத்தவர்களுக்கு மார்க்கம் தந்தவர்களும் மார்க்கச் சட்டங் களை விளக்கிக் காட்டியவர்களுமாவார்கள். அவர்களின் உளூவைச் செய்து காட்டிய அனைத்து நபித்தோழர்களும் தொடராகவே செய்து காட்டினர்.

## பாடம் – 14

### உளூவை நீக்கும் காரியங்கள்

உளூவை நீக்கும் காரியங்கள் ஆறு. 1. முன், பின் துவாரங்கள் வழியாக ஏதாவது வெளியாதல் 2. உடலிலி ருந்து அதிக அசுத்தம் வெளியாதல் 3. தூக்கம் அல்லது வேறு காரணங்களால் உணர்வு நீங்குதல் 4. துணியின்றி முன், பின் துவாரத்தைக் கையால் தொடுதல் 5. ஒட்டக இறைச்சி உண்ணுதல் 6. இஸ்லாத்தை விட்டும் வெளி

யேறுதல்- இதிலிருந்து அல்லாஹ் எம்மையும் இதர முஸ் லிம்களையும் பாதுகாப்பானாக!

முக்கியக் குறிப்பு: மய்யிதைக் குளிப்பாட்டுவதால் உளூ நீங்காது என்பதுதான் ஆதாரப்பூர்வமான கூற்று. அதிக மான அறிஞர்களின் கருத்தும்இதுதான். எனினும் குளிப் பாட்டுபவரின் கை, மய்யிதின் மறைவிடத்தில் துணியின்றி பட்டுவிட்டால் அவர் மீண்டும் உளூச் செய்வது கடமை. எனவே குளிப்பாட்டுபவர் துணியுடன்தான் மறைவிடத் தைத் தொட வேண்டும்.

அதுபோலவே ஒருவர் ஒருபெண்ணை இச்சையுடன் தொட்டாலும் இச்சையின்றித் தொட்டாலும் ஏதும் வெளி யாகாத வரை உளூ முறியாதென்பதே அறிஞர்களின் சரி யான முடிவாகும். ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் தமது மனைவியரில் ஒருவரை முத்தமிட்ட பின்பு உளூச் செய் யாமலேயே தொழுதிருக்கிறார்கள்.

குர்ஆனிலுள்ள நிஸா, மாயிதா என்ற இரு அத்தியா யங்களில் வரும் (அவ் லாமஸ்துமுன் நிஸாஅ) என்ற வச னத்தில் உடலுறவு கொண்டால் என்பதுதான் கருத்தா கும். இதுவே அறிஞர்களின் சரியான கருத்தாகும். இது தான் இப்னு அப்பாஸ் மற்றும் முன்னோர், பின்னோர் களான நல்லவர்களின் கருத்துமாகும். அல்லாஹ்வே நேர்வழிகாட்டப் போது மானவன்.

---

முந்தைய பாடத்தில் உளூவைப் பற்றிக் கூறிய ஆசிரியர் இங்கு உளூவை முறிக்கக்கூடியவற்றை விளக்க விரும்புகி றார். ஏனெனில் ஒரு முஸ்லிம் தன் மார்க்கத்தில் தெளிவான அறிவுடையவனாக இருப்பதற்காக.

உளூவை முறிக்கக்கூடியவைகள்:

1. முன்,பின் துவாரங்களிலிருந்து ஏதாவது வெளியாதல்: அது குறைவாக இருப்பினும் சரி அதிகமாக இருப்பினும் சரி. இது இருவகைப்படும்.

ஒன்று: மலஜலம் போன்று வழமையாக வரக்கூடியவை. எவ்வித அபிப்பிராய பேதமுமின்றி இது உளூவை முறித்து விடும். இந்தக் கருத்தை இப்னு அப்துல் பர் (ரஹ்) அவர்கள் கூறியுள்ளனர். அல்லாஹ் கூறுகிறான்: அல்லது உங்களில் ஒருவர் மல,ஜலம் கழித்து வந்தால்...தண்ணீர் கிடைக்காத போது தூய்மையான மண்ணில் தயம்மும் செய்து கொள் ளுங்கள். (5:6)

இரண்டு: புழு, முடி, கல் போன்ற எப்போதேனும் வரக்கூடி யவை: இதுவும் உளூவை முறித்துவிடும். ஏனெனில் நபி (ஸல்) தொடர் உதிரப்போக்கு உடையவளிடம் 'ஒவ்வொரு தொழு கைக்கும் நீ உளூச் செய்து கொள்' எனக் கூறியுள்ளனர். இத்தகைய இரத்தம் வழமையாக வரக்கூடியதல்ல. மேலும் இது முன், பின் துவார வழியாக வருவதால் வழமையாக வரக்கூடியதற்கு ஒப்பாகி விட்டது.

2. உடலிலிருந்து அதிகமான அசுத்தம் வெளியேறுதல்: குறைவாக வெளியேறினால் உளூவை முறிக்காது. உதாரண மாக இரத்தம். இது அதிகமாக வெளியானால் உளூ முறிந்து விடும். இரத்தம் குறித்து இப்னு அப்பாஸ் (ரழி) இது அதிகமாக வெளியானால் உளூவைத் திரும்பச் செய்வது கடமையாகும் எனக் கூறியுள்ளனர். இப்னு உமர் (ரழி) தம் உடலில் இருந்த ஒரு கட்டியை நசுக்கியதும் இரத்தம் வெளியானது. அப்போது உளூச் செய்யாமலேயே தொழுதார்கள். இவ்விருவரின் கருத் துக்கு மாற்றுக் கருத்து வேறு ஸஹாபாக்களிடம் இல்லையா தலால் இது எல்லோரின் ஒருமித்த கருத்தாக ஆகிவிட்டது.

3. தூக்கம் அல்லது வேறு காரணங்களால் உணர்வு நீங்குதல்: உதாரணம்: பைத்தியம், மயக்கம், போதை. நபி(ஸல்) கூறினார்கள்: காற்று வெளியேறிவிட்டதா என்பதைக் கண்காணிப்பது கண் ஆகும். எனவே யாரேனும் தூங்கிவிட்டால் அவர் உளூச் செய்து கொள்ளட்டும். *(அபூதாவூத்)* மயக்கம், பைத்தியம், போதை ஆகியவையும் உணர்வை நீக்கிவிடுவதால் அவை உளூவை முறித்துவிடும் என்பதில் ஐயமில்லை.

4. துணியின்றி முன், பின் துவாரத்தைத் தொடுதல்: யாரேனும் தனது மர்ம உறுப்பைத் தொட்டால் அவர் உளூச் செய்து கொள்ளட்டும் என்பது நபிமொழி. *(நஸயீ)*

5. ஒட்டக இறைச்சி சாப்பிடுவது: ஜாபிர் பின் ஸமுரா (ரழி) அறிவிப்பதாவது: ஒரு மனிதர், ஒட்டக இறைச்சி சாப்பிட்டால் நான் உளூச் செய்ய வேண்டுமா? என நபி(ஸல்)அவர்களிடம் கேட்டதும், 'ஆம்! ஒட்டக இறைச்சி சாப்பிட்டால் உளூச் செய்து கொள்' எனக் கூறினார்கள். *(முஸ்லிம்)*

6. இஸ்லாத்தை விட்டும் வெளியேறுதல்: அல்லாஹ் இதை விட்டும் நம்மைக் காப்பாற்றுவானாக! அல்லாஹ் கூறினான்: (நபியே!) நீர் இணைவைப்பீரானால் திட்டமாக உமது (நற்) செயல்கள் அழிந்துவிடும். (39:65)

மய்யித்தைக் குளிப்பாட்டுவதன் சட்டம், பெண்களைத் தொடும் சட்டம் குறித்து மூலாசிரியர் அறிஞர்களின் கருத்தை மூலத்தில் விளக்கியுள்ளார்கள். மேலும் அவ்விரண்டினாலும் உளூ முறியாதென்பதையே அவர்கள் உறுதிப்படுத்தியுமுள்ளார்கள். அல்லாஹ் மிக அறிந்தவன்.

## பாடம் - 15

ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மார்க்கம் வலியுறுத்திய நற்குணங்கள் சில வருமாறு: உண்மை, நாணயம், கற்பொழுக்கம், நாணம், வீரம், தர்மம், வாக்கு மாறாமை, அல்லாஹ் விலக்கியவற்றை விட்டும் விலகுதல், அண்டை வீட்டாரிடம் நல்ல முறையில் நடந்து கொள்ளல், இயன்ற வரை தேவையுள்ளோருக்கு உதவி செய்தல் குர்ஆனும், ஹதீசும் போதிக்கின்ற இன்னும் பல நற்குணங்கள் உள்ளன.

## பாடம் - 16

இஸ்லாமிய ஒழுக்கங்களில் சில வருமாறு: ஸலாம் கூறுதல், மலர்ந்த முகம் காட்டுதல், வலது கரத்தால் உண்ணல், குடித்தல், உண்ண, பருகும்போது பிஸ்மில்லாஹ் கூறுதல், முடிக்கும்போது அல்ஹம்து லில்லாஹ் கூறுதல், தும்மியவன் அல்ஹம்து லில்லாஹ் கூறுதல், தும்மியவன் அல்ஹம்து லில்லாஹ் கூறினால் அதைக் கேட்பவர் யர்ஹமுகல்லாஹ் கூறுதல், நோயாளியை நோய் விசாரித்தல், ஜனாஸாத் தொழுகை தொழுவதற்காகவும், அதை அடக்கம் செய்வதற்காகவும் அதைப் பின்பற்றிச் செல்லுதல், பள்ளிவாசல், வீடு போன்ற இடங்களில் நுழையும்போதும், வெளியேறும்போதும் மார்க்கம் கூறியபடி நடத்தல், பயணத்தின் ஒழுங்குகளைப் பேணுதல், பெற்றோர், உறவினர், அண்டை அயலார், சிறியவர், பெரியவர் ஆகிய அனைவரிடமும் நன்முறையில் நடந்து கொள்ளல், குழந்தை பெற்றவனுக்கு வாழ்த்துக் கூறல்,

மணமக்களை வாழ்த்துதல், சோதனையில் ஆட்பட்டோருக்கு ஆறுதல் கூறல், இஸ்லாம் கற்றுத் தந்த முறையில் ஆடை அணிதல், கழட்டுதல், செருப்பு அணிதல் இன்னும் இதுபோன்ற இஸ்லாமிய நற்பண்புகள் பல உள்ளன.

---

மூலாசிரியர் முந்தைய பாடங்களில் பெரிய, சிறிய மார்க்கச் சட்டங்களை விளக்கிக் கூறிய பின்னர் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மார்க்கம் வலியுறுத்திய சில நற்பண்புகளையும், இஸ்லாமிய ஒழுக்கங்களையும் இங்கு விளக்குகிறார். முஸ்லிம் சகோதரா! - அல்லாஹ் உனக்கும் நமக்கும் நன்மைகள் புரிய நல்லருள் புரிவானாக! - நீ இத்தகைய உயர்ந்த நற்குணங்களையும் உன்னதமான ஒழுக்கங்களையும் கடைபிடிப்பது கடமையாகும். நீ மக்களுக்கு சிறந்த முன்மாதிரியாய்த் திகழ வேண்டும் என்பதற்காக. இவற்றைப் பற்றிப் பிடிப்பதற்கு ஆர்வமூட்டும் விதமாக திருக்குர்ஆனிலும் நபிமொழிகளிலும் ஏறாளமான சான்றுகள் உள்ளன. விரிவை அஞ்சி அவை இங்கு தவிர்க்கப்படுகின்றன.

இவற்றை நடைமறைப் படுத்துவதில் உனக்கு நபி (ஸல்) அவர்கள் முன்மாதிரியாய் இருக்கட்டும். நபி (ஸல்) அவர்களின் குணம் பற்றி ஆயிஷா (ரழி) அவர்களிடம் கேட்கப்பட்டபோது, அவர்களின் குணம் குர்ஆனாக இருந்ததெனக் கூறினார்கள். *(முஸ்லிம்)* அவர்கள் உண்மை, நம்பிக்கை, வீரம், ஈகை, ஆகிய குணங்களில் பிரபலமாய்த் திகழ்ந்தார்கள். அவர்களின் வழியிலேயே சங்கைக்குரிய அவர்களின் ஸஹாபாக்களும் சென்றனர். ஆரம்ப காலத்தில் முஸ்லிம் வியாபாரிகளின் நடவடிக்கைகள் மூலமாகத்தான் இஸ்லாம் பல பகுதிகளில் பரவியது. அவர்கள் உண்மையாளர்களாய், நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உரியவர்களாய்த் திகழ்ந்தார்கள்.

முஸ்லிம் சகோதரனே! இவ்வழகிய பண்புகளை கடைபிடிப்பவர்களில் நீயும் ஒருவனாக ஆகவேண்டுமென நான் அல்லாஹ்விடத்திலும் பிறகு உன்னிடத்திலும் ஆதரவு வைக்கின்றேன். எனவே சொல்லிலும் செயலிலும் நீ வாய்மையைக் கடைபிடி. ஒன்றைச் செய்வதிலும் விடுவதிலும் நம்பிக்கையுடன் நடந்து கொள். சுயமரியாதை, உள்ளதைக் கொண்டு போதுமாக்கிக் கொள்ளல், நாணம், வீரம், வாக்கு நிறைவேற்றல், தர்மம், தூய்மை ஆகிய பண்புகளையும் மேற்கொள்.

அண்டை வீட்டாரிடம் நல்ல முறையில் நடந்து கொள். உன் மீது அவருக்குரிய கடமைகள் முக்கியமானவையாகும். தேவையுடையவருக்கு உதவி செய். ஒரு அடியான் தனது சகோதரனுக்கு உதவும்போதெல்லாம் அல்லாஹ் அவனுக்குதவுகிறான். உனக்குத் தெரிந்தவருக்கும் தெரியாதவருக்கும் நீ ஸலாம் கூறு. இது சுன்னத்தாகும். இது நேசத்தை உண்டாக்கும். அந்நியத்தனத்தையும் பாகுபாட்டையும் அகற்றும். பிற முஸ்லிம் சகோதரர்களிடம் முக மலர்ச்சியுடன் நடந்து கொள். ஏனெனில் இதுவும் ஒரு தர்மமாகும்.

வலது கையால் உண்ண, பருக வேண்டுமென நபி(ஸல்) அவர்கள் உனக்கு வழிகாட்டியிருப்பதைச் செய். பள்ளியில் நுழையும்போது வலது காலை முற்படுத்துவது வெளியே வரும்போது இடது காலை முற்படுத்துவது மற்றும் அந்த நேரங்களில் ஹதீஸில் வந்துள்ள துஆவைச் சொல்வது என நபிவழியைப் பற்றிப் பிடித்துக் கொள். வீட்டினுள் நுழையும் போதும் வெளியேறும்போதும் கூற வேண்டிய துஆவைப் பேணிக் கொள். இவ்வாறு நீ நடந்து கொண்டால் அல்லாஹ்வின் பாதுகாவல் கொண்டு நீ பாதுகாக்கப்படுவாய். அவனது கருணையும் உனக்குக் கிட்டும். நீ பயணம் செய்யும்போது பயணத் துஆவை மறந்து விடாதே.

உனது பெற்றோருக்கு உபகாரம் செய். அவர்களிடம் நல்ல முறையில் நடந்து கொள். அவர்களுக்கு நீ செய்ய வேண்டிய கடமை மகத்தானது. திருக்குர்ஆனும், ஹதீஸும் இதனை அறிவித்து விட்டன. இதில் கவனக்குறைவாக இருந்து விடாதே. அவ்வாறாயின் நீ கைசேதப்படுவாய். உறவினர், அண்டை வீட்டார், பெரியோர், சிறியோர் அனைவருக்கும் உபகாரம் செய்ய மறந்துவிடாதே. இது அல்லாஹ் மற்றும் அவன் தூதரின் வழிகாட்டுதலாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: நீங்கள் உபகாரம் செய்யுங்கள். உபகாரம் செய்பவர்களை நிச்சயமாக அல்லாஹ் நேசிக்கிறான். நபி(ஸல்)அவர்கள் கூறினார்கள். நிச்சயமாக நீங்கள் உங்களின் பொருள்களைக் கொண்டு மக்களிடம் தாரளமாக நடந்து கொள்ள முடியாது. எனினும் உங்களின் முக மலர்ச்சி மற்றும் அழகிய குணங்களின் மூலமே அவர்களிடம் தாரளமாக நடந்து கொள்ள முடியும். முஆத்(ரழி)அவர்களிடம் நபி(ஸல்) கூறினார்கள்: நீ எங்கிருந்தாலும் அல்லாஹ்வை அஞ்சிக்கொள். தீமை செய்துவிட்டால் தொடர்ந்து நன்மையைச் செய்து கொள். அது அத்தீமையை அழித்து விடும். மனிதர்களிடம் அழகிய குணத்துடன் நடந்துகொள்.

குழந்தை பிறந்தவருக்கு வாழ்த்துச் சொல்லிக் கொள். ஹதீஸில் வந்துள்ள துஆவைக் கொண்டு அவருக்கு துஆச் செய்து கொள். சோதனையில் ஆட்பட்ட உனது சகோதரர்களுக்கு ஆறுதல் கூறிக் கொள். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய நீ கூலிபோன்றே உனக்கும் கிடைக்கும். இன்னும் இதுபோன்ற ஏனைய இஸ்லாமிய நற்குணங்களைப் பற்றிப் பிடித்துக் கொள். தீய குணங்களைத் தவிர்த்துக் கொள். இத்தகையவர்களில் அல்லாஹ் எம்மையும் உம்மையும் ஆக்கி அருள்வானாக!

## பாடம் - 17

ஷிர்க் மற்றும் பாவங்களை விட்டும் தவிர்ந்து கொள்ளுதல்: இதிலுள்ளதுதான் நாசத்தைத் தரக்கூடிய ஏழு பாவங்கள். அவை, அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், சூனியம் செய்தல், நியாயமின்றி ஒரு உயிரைக் கொலை செய்தல், அநாதைகளின் பொருளை உண்ணுதல், வட்டி உண்ணுதல், போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடுதல், முஃமினான கற்புள்ள அப்பாவிப் பெண்களை அவதூறு கூறல் ஆகியனவாகும்.

மேலும் பெற்றோரை தொல்லைப்படுத்துதல் சொந்த பந்தத்தைத் துண்டித்து வாழல், பொய் சாட்சி சொல்லுதல், பொயச் சத்தியம், அண்டை வீட்டாரைத் துன்புறுத்தல், மக்களின் உயிர், உடமை, மானம், மரியாதை அகியவற்றில் அநீதமிழைத்தல், இன்னும் அல்லாஹ்வும் அவன் தூதரும் தடுத்துள்ள அனைத்துக் காரியங்களும் இதிலுள்ளதுதான்

---

முந்தைய பாடங்களில் ஆசிரியர் ஒவ்வொரு முஸ்லிமுக்கும் மார்க்கம் வலியுறுத்திய சில நற்குணங்களையும் இஸ்லாமிய ஒழுக்கங்களையும் கூறி முடித்ததும் இந்தப் பாடத்தில் இணைவைப்பின் ஆபத்தையும் அதையும் ஏனைய பாவங்களையும் விட்டு தவிர்ந்து கொள்வதையும் விளக்குகிறார். அவற்றிலுள்ளதுதான் நாசத்தைத் தரக்கூடிய ஏழு பாவங்கள். இவற்றை இங்கு கூறுவதன் நோக்கம் சமுதாயம் இவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டம் என்பதற்காக. நபி (ஸல்)அவர்கள் கூறினார்கள்: நாசத்தைத் தரக்கூடிய ஏழு பாவங்களைத் தவிர்ந்து கொள்ளுங்கள். அப்போது நபித்

தோழர்கள், அல்லாஹ்வின் தூதரே! அவை என்னென்ன? எனக் கேட்டனர். அதற்கு நபி(ஸல்)அவர்கள், அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், சூனியம் செய்தல், நியாயமின்றி ஒரு உயிரைக் கொலை செய்தல், அநாதைகளின் பொருளை உண்ணுதல், வட்டி உண்ணுதல், போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடுதல், முஃமினான கற்புள்ள அப்பாவிப் பெண்கள்மீது அவதூறு கூறுதல் என்று கூறினார்கள். அறிவிப்பவர்:அபூஹுரைரா (ரழி) *(புகாரி, முஸ்லிம்)*

இவற்றிற்கு 'நாசத்தைத் தரக்கூடியவை' என்று சொல்லப்படுவதற்குக் காரணம் இவற்றைச் செய்வதனால் இவ்வுலகில் தண்டனையும் மறுமையில் வேதனையும் கிடைப்பதன் மூலம் அவனுக்கு நாசம் ஏற்பட்டுவிடுகின்றது. ஷிர்க்கைப் பற்றிய ஹதீஸ் நான்காம் பாடத்தில் சொல்லப் பட்டிருக்கின்றது அதைப் பார்வையிடவும்.

சூனியம் என்பது ஒருவகை மந்திரித்தலாகும். உள்ளங்களிலும், உடல்களிலும் சில தாக்கங்களை ஏற்படுத்தக் கூடிய சில வேலைகள் இதில் உள்ளன. அவற்றில் நோயை ஏற்படுத்துவது, கொல்வது, கணவன், மனைவியியே பிரிவை ஏற்படுத்துவதும் அடங்கும். சூனியத்தின் வகைகளில் இதுவும் ஒன்றாகும். அதாவது இல்லாததை இருப்பதுபோல மனிதர்களின் கண்களுக்கு காட்டுவது. தாஹா அத்தியாயத்தில் அல்லாஹ் கூறுவது போல:

மூஸாவே! நீர் எறிகின்றீரா? அல்லது நாங்கள் முதலில் எறியட்டுமா? என்று (சூனியக்காரர்கள்)கேட்டனர். அதற்கு மூஸா கூறினார்: 'இல்லை! நீங்களே எறியுங்கள்'(அவர்கள் எறியவே)அவர்களின் கயிறுகளும் கம்புகளும் அவர்களின் சூனியத்தால் (பாம்புகளாகி) நெளிந்து ஓடுவதுபோல் மூஸாவுக்குத் தோன்றின. (20:65,66)

சூனியம் செய்வது ஹராமாகும். ஏனெனில் இது குஃப்ரும் தவ்ஹீதுக்கும் ஈமானுக்கும் முரணானதுமாகும். அல்லாஹ் கூறுகிறான்: (அதைக் கற்று) நீங்கள் காஃபிர்களாகிவிடாதீர் கள் எனக் கூறி எச்சரிக்காதவரை அவ்விருவரும் இ(ந்த சூனியத்)தை எவருக்கும் கற்றுக் கொடுக்கவில்லை. (2:102) இதற்குத் தண்டனை மரண தண்டனையாகும். ஹதீஸில் வந்துள்ள ஏழு பாவங்களும் இவையல்லாமல் மூலாசிரியர் கூறிய மற்ற பாவங்களும் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் ஹராமானவையாகும்.

முஸ்லிம்கள் இத்தகைய பாவங்களை விட்டும் முழுமை யாக தவிர்ந்து கொள்வது அவசியமாகும். இவற்றில் ஏதே னும் ஒன்றை ஒருவன் செய்துவிட்டால் அதிலிருந்து விலகி, அதற்காக வருந்தி, மீண்டும் அதே பாவத்தையோ அல்லது வேறு பாவங்களையோ செய்யாதிருக்க உறுதி கொள்வது அவசியமாகும். மேலும் தனக்குக் கீழுள்ளவர்களை இத்த கைய பாவங்களை விட்டும் தடுக்க வேண்டும். இவை குறித் தும் தீனுக்கு இவற்றால் உள்ள அபாயம் குறித்தும் தனது முஸ்லிம் சகோதரர்களை எச்சரிக்க வேண்டும். ஏனெனில் நிச்சயமாக இத்தகைய பணி நன்மையான காரியத்திற்கும் இறையச்சமுள்ள காரியத்திற்கும் ஒருவருக்கொருவர் உதவு தல், நன்மையை ஏவி, தீமையைத் தடுத்தல், அல்லாஹ்வின் பால் மக்களை அழைத்தல் ஆகிய அரும்பணிகளைச் சார்ந்த தாகும். இதுதான் நபிமார்களின் வழியுமாகும்.

அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) நீர் கூறுவீராக! இதுவே என்னுடைய (நேர்ய)வழியாகும். நான் அல்லாஹ்வின் பால் உங்களை அழைக்கிறேன். நானும் என்னைப் பின்பற்றிய வரும் தெளிவான ஞானத்தில் இருக்கின்றோம். (12:108)

பாவங்களை விட்டும் அல்லாஹ் பாதுகாப்பானாக!

## பாடம் - 18

### ஜனாஸாவின் சில சட்டங்கள்

மய்யிதை அடக்கம் செய்வதற்கான முன் ஏற்பாடுகள் வருமாறு:

1. ஒருவர் இறந்துவிட்டார் என உறுதியாகிவிட்டால் அவரது இரு கண்களையும் கசக்கி மூடிவிட வேண்டும். மேலும் நாடியைக் கட்ட வேண்டும்.

2. முஸ்லிமான மய்யித்தைக் குளிப்பாட்டுவது கட்டாயமாகும். எனினும் மார்க்கப்போரில் இறந்த உயிர்த்தியாகிகளைக் குளிப்பாட்டக் கூடாது. அவர்களுக்குத் தொழ வைக்கவும் தேவையில்லை. மாறாக அவர்கள் உடுத்தியிருந்த ஆடையுடனேயே அடக்கம் செய்ய வேண்டும். ஏனெனில் நபி(ஸல்)அவர்கள் உஹதுப் போரில் கொல்லப்பட்டோருக்குத் தொழ வைக்கவுமில்லை, குளிப்பாட்டவுமில்லை.

3. மய்யித்தைக் குளிப்பாட்டும் முறை: மய்யித்தின் மர்ம உறுப்பை மூடி மறைக்க வேண்டும். பின்னர் மய்யித்தை சிறிது நிமிர்த்தி அதன் வயிற்றை சற்று அழுத்தித் தடவ வேண்டும். குளிப்பாட்டுபவர் தனது கையில் ஒரு துணியை அல்லது அது போன்றதைச் சுற்றிக் கொண்டு மய்யித்தின் முன், பின் துவாரங்களிலிருந்து வெளியாகிய கழிவுகளைச் சுத்தம் செய்ய வேண்டும். பின்னர் தொழுகைக்கு உளூச் செய்வது போல உளூச் செய்விக்க வேண்டும். பின்பு தலையையும் தாடியையும் இலந்தை இலை அதுபோன்ற நறுமணம் கலந்த தண்ணீரால் கழுவ

வேண்டும். பின்னர் மய்யித்தின் வலது பாகம் பிறகு இடது பாகம் என அந்த தண்ணீரால் குளிப்பாட்ட வேண்டும். இவ்வாறே மூன்று தடவை குளிப்பாட்ட வேண்டும். ஒவ்வொரு தடவையும் மய்யித்தின் வயிற்றைத் மெதுவாகத் தடவ வேண்டும். கழிவு ஏதும் வெளியானால் அதைச் சுத்தம் செய்து துவாரத்தை பஞ்சு போன்றதன் மூலம் அடைக்க வேண்டும். அது பற்றிக் கொள்ளவில்லையெனில் களிமண், அல்லது பிளாஸ்டர் போன்ற நவீன மருத்துவ சாதனங்களால் அடைத்திட வேண்டும். பின்னர் மீண்டும் உளூச் செய்விக்க வேண்டும்.

மூன்று முறை குளிப்பாட்டியும் சுத்தமாகாவிட்டால் ஐந்து அல்லது ஏழு முறை குளிப்பாட்ட வேண்டும். பின்பு ஒரு துணியால் துடைக்க வேண்டும். பின்பு நறுமணப் பொருளை கக்கத்திலும், தொடை இடுக்குகளிலும், சுஜூத் செய்யும்போது தரையில்படும் உறுப்புகளிலும் வைக்க வேண்டும். உடல் முழுவதும் நறுமணம் பூசினாலும் நன்றே. நறுமணப் புகை கொண்டு கபன் துணிக்கு நறுமண மூட்ட வேண்டும். மய்யித்தின் மீசை, நகம் போன்றவை நீண்டு வளர்ந்திருந்தால் அதை வெட்டிக் குறைக்க வேண்டும். தலை முடியை வாரீவிடத் தேவையில்லை. பெண் மய்யிதின் தலை முடியை மூன்று சடைகளிட்டு பின் புறம் தொங்கவிட வேண்டும்.

4. கபனிடுதல்: ஆண் மய்யித்திற்கு மூன்று வெள்ளைத் துணிகளால் கபனிடுவது சிறந்தது. சட்டையும், தலைப் பாகையும் அதில் இருக்கக்கூடாது. அவற்றை ஒன்றின் மேல் ஒன்றாகச் சுற்ற வேண்டும். ஒரு வேஷ்டி, ஒரு

சட்டை, ஒரு சுற்றுத் துணி கொண்டு கஃபனிட்டாலும் பரவாயில்லை. பெண் மய்யித்தை ஐந்து துணிகளால் கஃபனிட வேண்டும். அவை, ஒரு மேலங்கி, ஒரு முந்தானை ஒரு கீழாடை, இரு முழு சுற்றுத் துணிகள்.

ஆண் குழந்தைக்கு ஒன்று முதல் மூன்று துணிகளால் கஃபனிடலாம். பெண் குழந்தையை ஒரு மேலங்கி, இரு சுற்றுத் துணிகளால் கஃபனிட வேண்டும். எல்லா மய்யித்திற்கும் அவற்றை முழுமையாக மூடி மறைத்துக் கொள்ளும் துணியிருப்பது கட்டாயமாகும். என்றாலும் மய்யித் இஹ்ராம் அணிந்த நிலையில் மரணமடைந்திருந்தால் இலந்த இலை கலந்த தண்ணீரால் குளிப்பாட்டி அவரது வேட்டி, மேல் துண்டுடன் அல்லது வேறு இரு துண்டுகளுடன் கஃபனிடப்பட வேண்டும். தலையையும் முகத்தையும் மறைக்கக் கூடாது, மணம் பூசவும் கூடாது. ஏனெனில் அவர் கியாமத் நாளில் தல்பியாச் சொன்னவராக எழுப்பப்படுவார் என ஹதீஸில் வந்துள்ளது.

பெண் இஹ்ராம் அணிந்தவளாக இருந்தால் மற்றப் பெண்களைப் போலக் கஃபனிட வேண்டும். என்றாலும் மணம் பூசக் கூடாது. முந்தானையால் அவளின் முகத்தையும் கையுறைகளால் அவளின் கைகளையும் மூடக் கூடாது. எனினும் பெண் மய்யித்தைக் கஃபனிடுவது பற்றி மேலே கூறப்படடதுபோல கஃபன் துணியால் அவளின் முகத்தையும் இரு கைகளையும் மூட வேண்டும்.

5. மய்யித்தைக் குளிப்பாட்டவும் தொழவைக்கவும் அடக்கவும் மிகத் தகுதியானவர் அவரால் வஸிய்யத்துச் செய்யப்பட்டவர். பின்னர் தந்தை, பின்னர் பாட்டனார்,

பின்னர் நெருங்கிய உறவினர்களாவர். பெண்ணைக் குளிப்பாட்ட மிகத் தகுதியானவர்கள் அவளால் வஸிய்யத்துச் செய்யப்பட்டவள். பின்னர் தாய், பின்னர் பாட்டி, பின்னர் பெண்களில் மிக நெருக்கமான உறவினர்கள்.

கணவர், மனைவியரில் ஒருவர் மற்றவரைக் குளிப்பாட்டலாம், ஏனெனில் அபூபக்கர் சித்தீக் (ரழி) அவர்கள் அவர்களின் மனைவியைக் குளிப்பாட்டியுள்ளார்கள். அலீ (ரழி) தமது மனைவி ஃபாத்திமா (ரழி) அவர்களைக் குளிப்பாட்டியுள்ளார்கள்.

6. மய்யித்துக்குத் தொழவைக்கும் முறை: நான்கு தக்பீர்கள் சொல்ல வேண்டும். முதல் தக்பீருக்குப் பிறகு சூரத்துல் ஃபாத்திஹா ஓத வேண்டும். அத்துடன் சிறிய சூராவை அல்லது ஒரு ஆயத், இரு ஆயத்துகளையோ ஓதிக்கொண்டால் நல்லது. ஏனெனில் இது விஷயமாக இப்னு அப்பாஸ் (ரழி) அறிவிக்கும் ஸஹீஹான ஹதீஸ் வந்துள்ளது. பின்பு 2-ம் தக்பீர் கூறி அத்தஹிய்யாத்தில் ஓதுவது போல நபீ (ஸல்) அவர்கள் மீது ஸலாவாத்து ஓத வேண்டும். பின்பு மூன்றாவது தக்பீர் கூறி

أَللّٰهُمَّ اغْفِرْ لِحَيِّنَا وَمَيِّتِنَا، وَشَاهِدِنَا وَغَائِبِنَا، وَصَغِيرِنَا وَكَبِيرِنَا،وَذَكَرِنَا وَأُنْثَانَا، أَللّٰهُمَّ مَنْ أَحْيَيْتَهُ مِنَّا فَأَحْيِهِ عَلَى الإِسْلامِ، وَمَنْ تَوَفَّيْتَهُ مِنَّا فَتَوَفَّهُ عَلَى الإِيْمَانِ، أَللّٰهُمَّ اغْفِرْ لَهُ وَارْحَمْهُ وَعَافِهِ وَاعْفُ عَنْهُ، وَأَكْرِمْ نُزُلَهُ وَوَسِّعْ مُدْخَلَهُ، وَاغْسِلْهُ بِالْمَاءِ وَالثَّلْجِ وَالْبَرَدْ، وَنَقِّهِ مِنَ الْخَطَايَا كَمَا يُنَقَّى الثَّوْبُ الأَبْيَضُ مِنَ الدَّنَسِ، وَأَبْدِلْهُ دَاراً خَيْراً مِنْ دَارِهِ،وَأَهْلاً خَيْراً مِنْ أَهْلِهِ، وَأَدْخِلْهُ الْجَنَّةَ،وَأَعِذْهُ مِنْ عَذَابِ الْقَبْرِ، وَعَذَابِ النَّارِ، وَافْسَحْ له فِي قَبْرِهِ، وَنَوِّرْ له فيه ، أَللّٰهُمَّ لا تَحْرِمْنَا أَجْرَهُ، وَلا تُضِلَّنَا بَعْدَهُ.

அல்லாஹும் மக்ஃபிர் லிஹய்யினா வமய்யிதினா வஷா ஹிதினா வகாயிபினா வஸகீரினா வகபீரினா வதகரினா வஉன்ஸானா. அல்லாஹும்ம மன்அஹ்யய்தஹு மின்னா ஃபஅஹ்யிஹி அலல் இஸ்லாம் வமன் தவஃப்ஃபைதஹு மின்னா ஃபதவஃப்ஃபஹு அலல் ஈமான், அல்லாஹும் மஃக்ஃபிர் லஹு வர்ஹம்ஹு வஆஃபிஹி வஃஃபு அன்ஹு வஅக்ரிம் நுஸ்லஹு வவஸ்ஸிஃ முத்கலஹு வஃக்ஸில் ஹு பில்மாயி வஸ்ஸல்ஜி வல்பரத், வனக்கிஹி மினல் கதாயா கமா யுனக்கஸ்ஸவ்புல் அப்யழு மினத்தனஸ், வஅப்தில்ஹு தாரன் கைரம் மின் தாரிஹி, வஅஹ்லன் கைரம் மின் அஹ்லிஹி, வஅத்கில்ஹுல் ஜன்னத்த, வஅஇத்ஹு மின் அதாஃபில் கப்ரி, வஅதாஃபீன் நார், வஃப்ஸஹ் லஹு ஃபீ கப்ரிஹி, வநவ்விர் லஹு ஃபீஹி, அல்லாஹும்ம லாதஹ்ரிம்னா அஜ்ரஹு வலா துழில்ல னா பஃதஹு.

(பொருள்: யா அல்லாஹ்! எங்களில் வாழ்ந்து கொண் டிருப்போரையும் மரணித்து விட்டவர்களையும் இங்கு வந்தி ருப்போரையும் வராமலிருப்போரையும் எங்களில் சிறியோர், பெரியோர், ஆண்கள், பெண்கள் ஆகிய அனைவரையும் மன் னித்தருள்வாயாக! யா அல்லாஹ் எங்களில் யாரை உயிர் வாழச் செய்கிறாயோ அவர்களை இஸ்லாமிய அடிப்படையில் வாழச் செய்வாயாக! எங்களில் யாரை நீ மரணிக்கச் செய் கிறாயோ அவர்களை ஈமானுடன் மரணிக்கச் செய்வாயாக! யா அல்லாஹ்! இவரை மன்னிப்பாயாக! இவருக்கு அருள் பாலிப்பாயாக! இவரது பிழை பொறுத்து சுகமளிப்பாயாக! இவரின் விருந்துபசாரத்தை கண்ணியப்படுத்துவாயாக! இவர் புகுமிடத்தை (மண்ணறையை) விசாலமாக்குவயாக! பனிக்கட்டி

ஆலங்கட்டி மற்றும் தண்ணீரால் இவரைக் கழுவுவாயாக! மேலும் பாவங்களிலிருந்து இவரைத் தூய்மையாக்குவாயாக அழுக்கிலிருந்து வெள்ளை ஆடையை நீ சுத்தப்படுத்தப்படுவதுபோல இவரது பாவத்திலிருந்து இவரைச் சுத்தப்படுத்துவாயாக! இவரது வீட்டுக்குப் பகரமாக சிறந்த வீட்டையும் இவரது குடும்பத்தாருக்குப் பகரமாக சிறந்த குடும்பத்தாரையும் இவருக்கு வழங்குவாயாக! கப்ரு மற்றும் நரகின் வேதனையை விட்டும் இவரைப் பாதுகாத்து சுவனத்தில் புகச் செய்வாயாக! அவருக்கு அவரது கப்ரில் விசாலத்தை ஏற்படுத்துவாயாக! அதில் அவருக்கு ஒளியையும் கொடுத்தருள்வாயாக! யா அல்லாஹ்! இவரின் கூலியை எங்களுக்குத் தடுத்து விடாதே! அவருக்குப் பின் எங்களை வழி தவறச் செய்துவிடாதே)

பின்பு நான்காவது தக்பீர் கூறி வலப்புறம் ஒரே ஒரு ஸலாம் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு தக்பீருக்கும் கைகளை உயர்த்துவது விரும்பத்தக்கதாகும். மய்யித் பெண்ணாக இருந்தால் அல்லாஹும் மக்ஃபிர்லஹா என்றும் இரு மய்யித்துகளிருந்தால் அல்லாஹும் மக்ஃபிர் லஹுமா என்றும் பல மய்யித்துகளிருந்தால் அல்லாஹும் மக்ஃபிர்லஹும் என்றும் கூற வேண்டும்.

சிறுகுழந்தையாக இருந்தால் பாவமன்னிப்புக் கேட்கும் பிரார்த்தனைக்குப் பதிலாக

أَللّٰهُمَّ اجْعَلْهُ فَرَطًا وَذُخْرًا لِوَالِدَيْهِ، وَشَفِيعًا مُجَابًا، أَللّٰهُمَّ ثَقِّلْ بِهِ مَوَازِينَهُمَا، وَأَعْظِمْ بِهِ أُجُورَهُمَا،وَأَلْحِقْهُ بِصَالِحِ سَلَفِ الْمُؤْمِنِينَ، وَاجْعَلْهُ فِي كَفَالَةِ إِبْرَاهِيمَ عَلَيْهِ السَّلام، وَقِهِ بِرَحْمَتِكَ عَذَابَ الْجَحِيمِ

**அல்லாஹும் மஜ்அல்ஹு ஃபரதன் வதுஹ்ரன் லிவா லிதைஹி வஷஃபீஅன் முஜாபன், அல்லாஹும்ம ஸக்கில் பிஹி மவாஸீனஹுமா, வஅஃழிம் பிஹி உஜூரஹுமா, வஅல்ஹிக்ஹு பிஸாலிஹி ஸலஃபில் முஃமினீன், வஜ்அல் ஹு ஃபீ கஃபாலத்தி இப்றாஹீம் அலைஹிஸ் ஸலாம், வகிஹி பிரஹ்மத்திக அதாபல் ஜஹீம்.**

(பொருள்: யா அல்லாஹ்! இந்தக் குழந்தையை முன்னரே சென்று, தன் பெற்றோருக்காக விருந்துபசாரம் தயார் செய் யக்கூடியதாகவும் பொக்கிஷமாகவும் ஈக்கியருள்வாயாக. ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வகையில் பரிந்துரை செய்யக் கூடியதாகவும் ஆக்குவாயாக! யா அல்லாஹ்! இந்தக் குழந் தையின் காரணமாக அதன் பெற்றோரின் தராசுகளைக் கன மானதாக ஆக்குவாயாக! இன்னும் அவர்களின் நற்கூலியை அதிகமாக்குவாயாக! இக்குழந்தையை முந்திச் சென்றுவிட்ட நல்ல முஃமின்களுடன் சேர்ப்பாயாக! இந்தக் குழந்தையை இப்ராஹீம் (அலை) அவர்களின் பராமரிப்பில் ஆக்குவாயாக! இன்னும் உனது அருளின் மூலம் இக்குழந்தையை நரக வேதனையை விட்டும் பாதுகாப்பாயாக)

**தொழவைப்பவர் ஆண் மய்யித்தின் தலைக்கு நேரா கவும், பெண் மய்யித்தின் நடுவிலும் நிற்பது நபிவழியா கும். பல மய்யித்துகளிருந்தால் இமாமுக்கு முன்னால் ஆண் மய்யித்தையும் பெண் மய்யித்தைக் கிப்லாவை அடுத்தும் வைக்க வேண்டும். அத்துடன் குழந்தைக ளின் ஜனாஸாவுமிருந்தால் பெண்ணின் ஜனாஸாவுக்கு முன் ஆண் குழந்தையின் ஜனாஸாவையும் பின்பு பெண் குழந்தையின் ஜனாஸாவையும் வைக்க வேண்டும். அந்த நேரத்தில் ஆண் குழந்தையின் தலை ஆண் மய்யித்தின்**

தலைக்கு நேராகவும் பெண் மய்யித்தின் நடுப்பகுதி ஆண் மய்யிதின் தலைக்கு நேராகவும் இருக்க வேண் டும். இதுபொல சிறுமியின் தலை பெண்ணின் தலைக்கு நேராகவும் அவளின் நடுப்பகுதி ஆணின் தலைக்கு நேராகவும் இருக்க வேண்டும். தொழும் அனைவரும் இமாமுக்குப் பின்னால் நிற்க வேண்டும். ஒருவருக்கு மட்டும் நிற்க இடமில்லையென்றால் அவன் இமாமின் வலது பாகத்தில் நிற்க வேண்டும்.

وصلى الله وسلم وبارك على نبينا محمد وعلى آله وصحبه أجمعين.

# مؤسسة عبدالعزيز بن باز الخيرية

## الرؤيـة

أن تكون مؤسسة عبد العزيز بن باز الخيرية المصدر الأول والمعتمد للميراث العلمي لسماحة الشيخ عبد العزيز بن باز ـ رحمه الله ـ في أنحاء العالم ، ومنبراً للمنهج الوسطي .

## الرسالة

مؤسسة علمية دعوية ، تنفذ أعمالها بصورة احترافية ، لخدمة ونشر ميراث سماحة الشيخ عبد العزيز بن باز ـ رحمه الله ـ العلمي ، ومنهجة الوسطي ، ومضامينه ، وتوسيع دائرة الإفادة منه .

## الأهداف :

- استكمال قاعدة المعلومات الشاملة لسماحة الشيخ ـ رحمه الله ـ وماقيل او أثر عنه .
- خدمة الإرث العلمي لسماحة الشيخ ـ رحمه الله ـ ليخرج بمواصفات قياسية وجود عالية .
- نشر الإرث العلمي لسماحة الشيخ ـ رحمه الله ـ وإخراجه بصيغ متعددة ولغات مختلفة .
- منح أذونات الطباعة والنشر للإرث العلمي لسماحة الشيخ ـ رحمه الله ـ فيمايتعلق بحقوق المؤلف .
- متابعة استكمال منح الأذونات في الجانب العلمي من إدارة البحوث العلمية والإفتاء .
- إعداد ودعم البرامج والجهات التى تخدم علم سماحة الشيخ ـ رحمه الله ـ ومنهجه وتوسيع دائرة الإفادة منه .
- إعداد ودعم الدراسات والبرامج التى تهدف إلى تعميق منهج الوسطية والاعتدال .
- المشاركة في برامج توعية وتاهيل وتدريب أفراد المجتمعات على المضامين التى تدخل في دائرة رؤية المؤسسة ورسالتها وأهدافها .
- توفير الموارد البشرية والمالية اللازمة لتنفيذ أهداف المؤسسة .
- وضع مايرد للمؤسسات من هبات او تبرعات أو وصايا في مصارفها الشرعية ضمن أنشطتها المعتمدة .


المملكة العربية السعودية
ص.ب ٢٤١٩١٩ الرياض ١١٣٣٢
هاتف : ٩٦٦+ ٩٢٠٠٠٠٦٠٢ + فاكس : ٩٦٦١+ ٤٢٥٨٩٨٠
موقع سماحة الشيخ : www.binbaz.org.sa
موقعنا على الانترنت : www@binbazfoundation.org
البريد الإلكتروني : info@binbazfoundation.org



مطابع الحميضي
ت: 2130130 الرياض